# உள்ளுரையாடல்



அறிவியல் ஆன்மீக விஞ்ஞானி

திலெ.சுபாஸ் சந்திர போஸ்

# உள்ளுரையாடல்

அறிவியல் ஆன்மிக விஞ்ஞானி

தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

# நூல்குறிப்புக்கள்


| | | |
|---|---|---|
| பெயர் | : | உள்ளுரையாடல் |
| தன்மை | : | மனத்தைப் பற்றிய அறிவியல் |
| உரிமை | : | தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் |
| அளவு | : | 15 செ.மீ x 21 செ.மீ. |
| பக்கம் | : | 68 |
| விலை | : | ரூபாய் 80/= |
| பதிப்பு | : | 2022, முதலாம் பதிப்பு |
| அச்சிட்டோர் | : | தி பிரிண்டிங் ஹவுஸ்<br>எண்: 8 ரேஸ் கோர்ஸ் ரோடு<br>திருச்சிராப்பள்ளி-620023 |
| வெளியீடு | : | தொ(ல்)லியல் ஆய்வு மையம்,<br>சந்திரா போஸ் அறக்கட்டளை,<br>பதிவு எண்: 4/94/2015<br>43.பி. புதுரெட்டித் தெரு, பீமநகர்,<br>திருச்சிராப்பள்ளி-620 001 |
| அலைப்பேசி எண் | : | 91 9080650420 / 91 9750894532 |
| மின்னஞ்சல் | : | archaeosymbolist@gmail.com |

அட்டைப்படம் வடிவமைப்பு: தி.லெ.சுபாஸ் சந்திர போஸ்

# திருமந்திரம்

மனமாயை மாயை இம்மாயை மயக்க
மனமாயை தான்மாய மற்றொன்றும் இல்லை
பினை மாய்வதில்லை பிதற்றவும் வேண்டா
தனை ஆய்ந்திருப்பது தத்துவம் தானே. திருமந்திரம்-2956

பொருள் : மனத்துள் எழும் பந்த பாசப் பற்றுகளே மாயை என்னும் ஆசையாகும் இந்த ஆசையானது அறிவை, மனதை மயக்கும் இயல்புடையது.

இந்த ஆசை தரும் மயக்கம் அழிந்துவிட்டால் போதும். வேறு துன்பங்கள் ஏதும் இல்லை. இதற்கு மேலும் விடுவதற்கோ, அழிவதற்கும் ஒன்றுமே இல்லை.

எனவே வீணாக வெறும் பேச்சுப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். தன்னை அறிவதே தத்துவம் என்பதை உணர்ந்து, உங்களை அறிய முயலுங்கள்.

தத்துவம் என்பது தன்னை உணர்வது. தன்னை உணர்வது என்பது, தன்னை மயக்கித் தீயவழிச் செல்லத் தூண்டும் ஆசைகளை (மாயப் பந்தப் பாசங்களை) விட்டொழிப்பது.

நம்மை அடக்கும் ஆசையை அடக்கிவிட்டால் நமக்கு அது அடங்கும் என்பது கருத்து.

# பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| *01.* | முன்னுரை | *05* |
| *02.* | விரிவுரை | *09* |
| *03.* | மனதுக்கும் புத்திக்கும் இடையிலான ஓர் உரையாடல் | *13* |
| *04.* | அன்பனுக்கும் நன்பனுக்கும் இடையிலான ஓர் உரையாடல் | *20* |
| *05.* | குருவுக்கும் சீடனுக்கும் இடையிலான ஓர் உரையாடல் | *30* |
| *06.* | நிறையுரை | *64* |

# முன்னுரை

உலகில் வாழும் மானுடர்கள் முதல் அனைத்து சீவராசிகளும் இன்பமான வாழ்க்கையை விரும்பி அந்த இன்பத்தை மட்டுமே தேடி அலைகின்றன. எந்த ஒரு சீவராசியும் துன்பமான வாழ்க்கையை விரும்புவதில்லை.

அவற்றில் குறிப்பாக மானுடர்கள் இன்பமாக வாழும் நேரத்தில், தான் என்ற அகம்பாவத்தால் தன்னைப்பற்றி அறியவேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் எழுவதே இல்லை.

துன்பமாக வாழும் நேரத்தில் மட்டுமே தன்னைப்பற்றி அறியவேண்டும் என்ற எண்ணம், குறிப்பாக மானுடர் மனதில் எழுகின்றன. அந்நேரத்தில் தன்னைபற்றி அறிய வேண்டும் என்பதற்கான பல கேள்விகள் எழுகின்றன. அவையாவன:-

“நாம் ஏன் பூமியில் பிறந்தோம்? பூமியில் எதற்காக வாழ்கிறோம்? பூமியில் வாழும் காலத்தில் நாம் என்ன செய்யவேண்டும்? ஏன் மரணம் அடைகிறோம்? மரணத்திற்கு பின் எங்கே செல்கிறோம்? ” போன்ற கேள்விகளாகும்.

அத்தகைய கேள்விகள் முற்காலத்திலும் கேட்கப்பட்டன, தற்காலத்திலும் கேட்கப்படுகின்றன, இனிவரும் காலங்களிலும் கேட்கப்படப் போகின்றன. அக்கேள்விகளுக்கான விடைகளை அறிய முடியாத காரணத்தால்தான் மானுடர்களின் உலக வாழ்க்கை புரியாத ஒரு புதிராகவே இருந்து வருகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

இந்தப் புரியாத புதிரை உணர்ந்தவர்களும், முற்காலத்தில் வாழ்ந்தவர்களுமான ஞானிகளாகிய முனிவர்கள் தங்களது அனுபவ ஞானம் என்னும் அனுபூதியின் வாயிலாக மானிடர் வாழ்க்கையைப் பற்றிய அனைத்து கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிந்துள்ளனர்.

தாங்கள் அறிந்தவற்றை தமக்கே சொந்தம் என அவர்கள் உரிமை கொண்டாடவும் இல்லை, மூடி மறைக்கவும் இல்லை. அதற்கு மாறாக தத்தம் சந்ததியருக்கு வாய்மொழி வாயிலாக போதித்துள்ளனர்.

பிற்காலங்களில் தங்களது சந்ததியர் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் மலைக்குகைகளில் பாறை ஓவியக் குறியீடுகளாக இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கருப்பு நிறத்திலும், எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கருஞ்சிவப்பு நிறத்திலும், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளை நிறத்திலும் வரைந்து வைத்துள்ளனர்.

அப்பாறை ஓவியங்கள் ஆதித்தனின் ஒளிக் கதிர்களாலும், மழை நீராலும் அவை மங்கி மறைந்து வருகின்றன என்பதும், ஏராளமான பாறை ஓவியக் குறியீடுகள் பாறை உடைப்பவர்களில் கரங்களில் சிக்கிச் சின்னா பின்னமாகி, சீரழிந்துவிட்டன என்பதும் பரப்பாய்வுகளின் போது தெரியவருகின்றன.

இறந்தவர்களை இட்டுப் புதைக்கும் மட்பாண்டமான முதுமக்கட்தாழிகளின் மேல்புறத்தில் குறியீடுகளாகக் கீறி பூமிக்கடியில் பாதுகாப்பாகப் புதைத்து வைத்துள்ளனர். அவ்வாறு பாதுகாக்கப்பட்டவையே தற்கால அகழாய்வுகளின்போது கண்டுபிடிக்கப்படுகின்றன.

பரப்பாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பாறை ஓவியங்களும், அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட பானைக் கீறல் வடிவங்களும் எதை அறிவிக்கின்றன என்பதை அறிய முடியாத காரணத்தால் அவைகளும் ஒரு புரியாத புதிராகவே உள்ளன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

ஒரு காலக்கட்டத்தில் நம் முன்னோர்கள் தாங்கள் அறிந்தவற்றை பனை ஓலைச்சுவடிகளில் பதிவு செய்து வைத்தனர். அவை பனைமரத்தின் ஓலைகள் என்பதால் 300 ஆண்டுகளுக்குள் பழுதடைந்துள்ளன. எனவே ஓலைச்சுவடி எழுதுபவர்களால் அவை பல முறை புதுப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு புதுப்பிக்கும் போது ஓலைச்சுவடி எழுதுபவர்கள், அவர்கள் வாழும் காலத்திற்கும் தங்களது எண்ணத்திற்கும் ஏற்ப சில மாற்றங்களையும், இடைச் செருகல்களையும் செய்துள்ளனர்.

மானுடர்களின் அறியாமையால் ஏராளமான ஓலைச்சுவடிகள் தகுந்தப் பாதுகாப்பின்றி அழிந்துவிட்டன, அன்னிய தேசத்தவரால் களவாடப்பட்டுள்ளன, சில தீயசக்திகளால் தீக்கு இரையாக்கப்பட்டுள்ளன.

தப்பிப் பிழைத்தவையும், பல்வேறு மாற்றங்களுக்கும் இடைச் செருகள்களுக்கும் உட்பட்டவையுமான ஓலைச்சுவடிகளின் பிரதிகளின் தொகுப்பே காகிதத்தில் அச்சிடப்பட்ட நூல்கள். எனவே அந்நூல்களின் வாயிலாக அறியக் கூடியவை முற்றிலும் உண்மையான விடயங்கள் அல்ல.

மேலும் உண்மையான விடயங்களை கூறும் பாறை ஓவியங்களைப் பற்றியும், பானைகளின் கீறல் வடிவங்களைப் பற்றியும் ஆய்வு செய்ய சிறப்பாய்வு பிரிவு ஒன்றை அமைக்க இந்தியத் தொல்பொருள் துறையோ, தமிழகத் தொல்லியல் துறையோ, தமிழகத் தமிழாய்வு மையங்களோ முன்வரவில்லை, தன்னார்வ ஆய்வாளர்களுக்கு வாய்ப்பு அளிப்பதும் இல்லை, அவர்களது கருத்துக்களை ஏற்றுக்கொள்வதும் இல்லை.

மேற்கண்டவையே மானுடர் வாழ்க்கை புரியாத ஒரு புதிராக இருப்பதற்கான காரணங்கள் என்பது எமது அனுபவ அறிவின் வாயிலாக அறிந்தவையாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன், மானுடர் வாழ்க்கையை பற்றிய புரியாத புதிர்களுக்கு விடைகான வேண்டும் என்று எமது உள்ளுணர்வு உணர்த்தியது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அதுவே எமது **தேடலுக்கும்** வித்திட்டது. அத்தேடல் என்பது புறத்தேடல், அகத்தேடல் என இருவகைப்படும். மானுடர் வாழ்க்கையை பற்றிய விடயங்களை புறத்தேடலால் அறிய முடியாது, அகத்தேடலால் மட்டுமே அறிய முடியும். அத்தகைய அகத்தேடல் உணர்வு அனைவருக்கும் உண்டாவது இயல்பு ஆனாலும் அதனை தேடி அலைபவர்கள் மிகக்குறைவு என்பதையும் யாம் தெரிந்து கொண்டோம்.

எமது அகத்தேடலின் வாயிலாகக் காலத்தால் முற்பட்டதும், ஆன்மிக பூமியான இந்தியத் துணைக்கண்டத்திற்கு மட்டுமே உரிமையானதுமான பாறை ஓவியங்கள், பானைக் குறியீடுகள், யோக சாத்திர நூல்கள், சிற்ப சாத்திர நூல்கள், முக்கிய உபநிடதங்கள், கைவல்லிய நவநீதம், சித்தர்கள் கண்ட மானுட ரகசியம் மற்றும் *What becomes of the Soul after death?* (இறப்புக்குப் பின் உயிர் என்னவாகிறது?) போன்ற அரிய வகையான நூல்களில் மானுடர் பிறப்பு, வாழ்க்கை, இறப்பு பற்றிய சில குறிப்புக்கள் அங்கொன்றும், இங்கொன்றுமாக பதிவு செய்யப்பட்டுள்ளதைக் கண்டோம்.

அவ்விடயங்களின் ஒரு சிறிய தொகுப்பே **உள்ளுரையாடல்** (மனவெழுச்சியால் உண்மைப் பொருள் பற்றி கலந்து பேசுதல்) என்றத் தலைப்புடைய ஒரு மனநூல் என்னும் மனத்தைப் பற்றிய அறிவியலாகும்.



மானுடர் பிறவி (மனிதப் பிறவி) எடுத்த அனைவருக்கும் பயன் தரவேண்டும் என்ற நல்ல மனதில் இந்நூலை செம்மைப்படுத்திய என் ஆருயிர் நன்பரும் மறைந்த தமிழ்ச்செம்மல் மேட்டூர் அணை மா.பாண்டுரங்கன் நினைவாகத் தமிழ்கூறும் நல்லுலகுக்கு வழங்குகிறோம்.

# விரிவுரை

விரிவுரை என்பதற்கு இந்நூலின் விரிவான உரை எனப் பொருளாகும். இப்பகுதியின் முதலில் உலகில் வாழும் அனைத்து **சீவராசிகள்** பற்றியும், அடுத்து **மனித மனம்** என்பதைப் பற்றிய சில விடயங்கள் விவரிக்கப்படுகின்றன.

**சீவராசிகள்**

பொதுவாக இவ்வுலகில் வாழும் அனைத்துமே **உயிர்த் தொகுதிகள்** என்னும் உயிருள்ள சீவராசிகள். அவை அனைத்தும் நிலம், நீர், நெருப்பு (தீ), காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் கூட்டுக் கலவைகள்.

அவை கருப்பையிலிருந்து பிறந்தவை, முட்டையிலிருந்து பிறந்தவை, வித்து வேர்களிலிருந்து மேற்பிளந்து பிறந்தவை, வியர்வையிலிருந்து பிறந்தவை ஆகிய நால்வகை பிறப்பால் வேறுபட்டவை.

ஊர்வன, நீந்துவன, பறப்பன, நடப்பன ஆகிய நால்வகைச் செயலாலும் வேறுபட்டவை. பிறப்பாலும், செயலாலும் வேறுபட்ட சீவராசிகள் அனைத்திலும் ஆண், பெண், இரண்டுக்கும் இடைப்பட்ட அலி ஆகிய மூவகை இனங்களுண்டு.

உயிர்த் தொகுதிகளான, மிருகங்களிடமும் மனிதர்களிடமும் நிலத்தின் தன்மையும், மீன்களிடம் நீரின் தன்மையும், அறிவாளிகளிடம் நெருப்புத் தன்மையும், பறவைகளிடம் காற்றின் தன்மையும் அதிக அளவில் இருக்கும். ஆகாயத்தின் தன்மை அனைத்து சீவராசிகளிடமும் சமஅளவில் இருக்கும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவற்றில் குறிப்பாகக் கருப்பையிலிருந்து பிறந்த மானுடர் உடலின் ஐம்பூதங்களுக்கும், ஐந்து ஞான இந்திரியங்களுக்கும் (பொறிகளுக்கும்), ஐம்புலன்களுக்கும், ஐந்தறிவுகளுக்கும் தொடர்புண்டு. அவையாவன:-

| **ஐம்பூதங்கள்** | **பொறிகள்** | **புலன்கள்** | **அறிவுகள்** |
|---|---|---|---|
| நிலம் | மூக்கு | நுகர்தல் | மூன்றாம் அறிவு |
| நீர் | நாக்கு | ருசி | இரண்டாம் அறிவு |
| நெருப்பு | கண் | பார்த்தல் | நான்காம் அறிவு |
| காற்று | தோல் | தொடு உணர்வு | முதலாம் அறிவு |
| ஆகாயம் | காது | கேட்டல் | ஐந்தாம் அறிவு |

மனிதர்களுக்கு கூடுதலாக **மனம்** என்னும் ஆறாவது அறிவும் உண்டு. மனம் என்னும் ஆறாவது அறிவு கொண்ட மனிதர்களுக்கு பேசக் கூடிய **வாய்,** பிடிக்கக் கூடிய **கை**, மலத்தை வெளியேற்றக் கூடிய **குதம்**, சிறு நீர் கழிக்கவும் இனவிருத்தி செய்வதற்குமான **குறி**, நடக்கக் கூடிய **கால்** ஆகிய ஐந்து கர்ம (செயல்) இந்திரியங்களும் உண்டு.

இந்த ஐந்து கர்ம இந்திரியங்களும் மனம் என்னும் ஆறாவது அறிவு இடும் கட்டளையை ஏற்று செயல் புரியும் வெறும் வேலையாட்கள் மட்டுமே என்பதும், சிந்திக்க தெரியாதவை என்பதும் குறிப்பிடத்தக்கது. முதலில் ஆறாம் அறிவான மானுடர் என்னும் மனித மனத்தைப்பற்றிக் காண்போம்

**மனித மனம்**

மனித மனம் எங்கே இருக்கிறது என்பது முதல் கேள்வி. அக்கேள்விக்கான விடையாக மனமானது மனித உடலில் மார்பு பகுதியின் வலது புறக் காம்பின் மேல் உள்ளதாக யோக சாத்திர நூல்கள் கூறுகின்றன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அந்த இடத்தில் அன்னை இலக்குமிதேவி ஒரு கீழ்நோக்கும் முக்கோண வடிவத்தில், இரு கரங்களிலும் மலர்களை ஏந்தியவாறு அமர்ந்த கோலத்தில் பிரிக்க முடியாதவளாக (அபின்னையாக) உள்ளதாக சிற்ப சாத்திர நூல்கள் கூறுகின்றன.

அதற்குச் சான்றாக ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட மகாவிட்ணுவின் சிற்பத்தில் சிற்பிகள் வடிவமைத்து அதனைச் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்தகைய சிற்பங்களை தஞ்சை சரஸ்வதி மகால் சிற்பக் கலைக்கூடத்தில் காணலாம்.

மனம் என்பதற்கு நெஞ்சம், **விருப்பம்**, **எண்ணம்,** இந்துப்பு (மருந்து உப்பு வகை) என்றும், அவற்றில் **விருப்பம்** என்பதற்கு ஆசை, அன்பு, **பற்று** என்றும், **எண்ணம்** என்பதற்கு நினைப்பு, நோக்கம், நாடியப் பொருள், மதிப்பு, இறுமாப்பு, **கவலை** என்றும் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

மனித மனமானது, ஐந்து புலன்களான நுகர்தல், ருசி, பார்த்தல், தொடு உணர்வு, கேட்டல் ஆகியவற்றின் வாயிலாக பெறும் இன்பங்களே சிறந்தவை எனத் தவறாக எண்ணுகிறது. அந்தத் தவாறான எண்ணமே அப்புலனின்பங்கள் மீது " எனது என்னும் பற்று (புறப்பற்று)" கொள்ள வித்திடுகிறது.

அப்பற்றால் மேலும் இன்பத்தைப் பெற எண்ணுகிறது. தனது எண்ணம் நிறைவடைய கர்ம இந்திரியங்களைச் செயல்பட உத்தரவு இடுகிறது. கர்ம இந்திரியங்களின் செயல்பாட்டால் இன்பத்தை அடையும் போது மனம் துள்ளிக் குதிக்கிறது, துன்பத்தை அடையும் போது மனம் துவண்டு போய் கவலையடைகிறது.

அவ்வாறு பலமுறை இன்பத்தையும், துன்பத்தையும் மனித மனம் அனுபவித்தது. இவ்வாறு இன்பத்தையும், துன்பத்தையும் பலமுறை மாறி, மாறி அனுபவித்த மனித மனதில் அதற்கான காரணத்தை அறிய வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று. அந்த எண்ணமே மனதின் விருப்பமுமானது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மனமானது, தனது விருப்பத்தை நிறைவேற்றி கொள்ள எண்ணி முதலாவதாக ஐம்புலன்களை அனுகி உதவி கேட்டது, அவைகளோ தங்களால் இயலாது என்றன. இரண்டாவதாக ஐந்து கர்ம (செயல்) இந்திரியங்களை அனுகி உதவி கேட்டது, அவைகளும் தங்களால் இயலாது என்றன. படித்த படிப்பறிவிடம் உதவி கேட்டது அதுவும் தன்னால் இயலாது என்றது.

தனது விருப்பத்தை நிறைவேற்ற இயலாத ஐம்புலன்கள் மீதும், ஐந்து கர்ம (செயல்) இந்திரியங்கள் மீதும், பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் படித்த படிப்பறிவு மீதும் மனதுக்கு வெறுப்புணர்வு உண்டானது.

“தன் விருப்பத்தை நிறைவேறுவதற்கு உதவிபுரிய யாரும் இல்லையா? நான் என்ன ஒரு அனாதையா?” என மனம் தனக்குத் தானே ஒரு கேள்வியைக் கேட்டது.

அப்போது, **“மனமே! உனக்கு உதவிபுரிய நான் இருக்கிறேன், நீ ஒரு அனாதை அல்ல.”** என அகத்திலிருந்து வெளிப்பட்ட உள்ளோசை என்னும் அகவொலி ஒன்றை மனதால் கேட்க முடிந்தது. அப்போது மனமானது அந்த உள்ளோசை தன்னை தன்வசப்படுத்துவது போன்றதொரு உணர்வை உணர்ந்தது.

அந்த உணர்வால் உள்ளோசையிடம், “யார் நீ?” என மனம் கேட்டது. அதற்கு நான் “**புத்தி**” என அது பதில் கூறியது.

புத்தியைப் பற்றி முழுமையான விடயங்களை அறிந்துகொள்ள மனம் விரும்பியது. தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்துகொள்ள புத்தியிடம் பலக் கேள்விகளைக் கேட்டது, அனைத்துக் கேள்விகளுக்கு புத்தியும் தகுந்த பதில்களை கூறியது. அவைவே **மனதுக்கும் புத்திக்கும் இடையிலான ஓர் உரையாடல் ஆனது.**

## மனதுக்கும் புத்திக்கும் இடையிலான ஓர் உரையாடல்

மனம் : நீ புத்தி என்று சொன்னாயே! நீ எங்கே இருக்கிறாய்?

புத்தி : உன்னைப் போலவே நானும் இதே மனித உடலில் தான் இருக்கிறேன்.

மனம் : அப்படியானால், நான் அனுபவித்த இன்ப, துன்பங்களை நீ நன்றாக அறிவாயா?

புத்தி : நான் நன்றாக அறிவேன்.

மனம் : நான் துன்பங்களை அனுபவித்த போது, எனக்கு உதவிபுரிய நீ ஏன் முன் வரவில்லை?

புத்தி : நீ என்னிடம் உதவி கேட்கவில்லையே... அதனால் தான் நான் முன்வரவில்லை.

மனம் : நான் உன்னிடம் உதவிபுரியக் கேட்டிருந்தால், நீ உதவி செய்து இருப்பாயா?

புத்தி : நிச்சயமாக உதவி செய்திருப்பேன்.

மனம் : சரி! நான் அனுபவித்த இன்ப, துன்பங்களுக்கான காரணங்கள் தான் என்ன?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

புத்தி : ஓ! மனமே நீ அனுபவித்த இன்ப, துன்பங்களுக்கான முக்கிய காரணங்களை ஒவ்வொன்றாக சொல்கிறேன். நான் சொல்வதை நீ பொறுமையுடன் கேட்பாயா?

மனம் : பொறுமையுடன் கேட்பாயா? என்று ஏன் கேட்கிறாய்.

புத்தி : நீ யானைக்கு ஒப்பான பலமும், குதிரைக்கு ஒப்பான வேகமும், அங்கும் இங்கும் தாவித் தாவிச் சொல்லும் குரங்கின் செயலும் உடையவன். ஆதலால் உன்னைப் பற்றி மிகவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். அதனால் தான் நான் சொல்வதை நீ பொறுமையுடன் கேட்பாயா? எனக் கேட்டேன்.

மனம் : சரி! சரி! என்னைப் பற்றிய விமர்சனம் வேண்டாம். நீ சொல்வதை நான் பொறுமையுடன் கேட்கிறேன், சொல்.

புத்தி : நல்லது. புற உறுப்புக்களான ஞான இந்திரியங்களுடன் தொடர்புடைய ஐம்புலன்களின் வாயிலாக தீண்டல் (தொடு உணர்வு), முகர்தல், ருசித்தல், பார்த்தல், கேட்டல் ஆகிய ஐந்து அறிவுகளால் சுகத்தையும், இனிமையையும் உணர்ந்தாய்.

அவையே மிகச் சிறந்தது என்றும், மிக உயர்ந்தது என்றும் எண்ணினாய். அவ்வாறு நீ எண்ணியதால் அவற்றின் மீது **ஆசை என்னும் மோகம்** உண்டானது.

அந்த ஆசை என்னும் மோகம் உனது எண்ணம் நல்லதா அல்லது கெட்டதா என்பதையும் அதனால் உண்டாகும் இன்பம், துன்பம் ஆகியவற்றைப் பகுத்து அறிய என்னிடம் அனுகவிடாமல் ஒரு மாயத்திரைபோட்டு மறைத்தது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மனம் : நான் அனுபவித்த இன்பதுன்பங்களை நீ அனுபவிக்கமாட்டாய?

புத்தி : நான் அனுபவிக்கமாட்டேன்.

மனம் : அப்படியானால் நீ எதற்காக என் உடலில் இருக்கிறாய்?

புத்தி : உனக்கு எது நல்லது - எது கெட்டது, எது நன்மை - எது தீமை என்பதை நீ அறிய உதவி புரிவதற்காக மட்டுமே நான் உடலில் இருக்கிறேன்.

மனம் : நீ என்னைவிட உயர்ந்தவனா?

புத்தி : நான் உண்மை (சத்து), தெளிவான அறிவு (சித்து) ஆகிய இரண்டுடன் மிகவும் நெருக்கமானவன். நான் உள்ளுயிர் என்னும் உயிராகிய ஆன்மாவோடு உடன்பிறந்தவன்.

ஆனந்தத்ததை அனுபவிக்க நல்லவழி காட்டுபவன். ஆகவே நான் உன்னைவிட மேலானவன்.

மனம் : சரி! சரி! உனது சுய விமர்சனம் போதும். எப்போதும் இன்பமாக இருப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் சொல்.

புத்தி : இன்பத்தின் மீது அதிக நாட்டம் இருப்பது மனதாகிய உனது இயல்பு. நான் உனக்கு மூவகையான இன்பங்களைப் பற்றிச் சொல்கிறேன். அதில் எந்த இன்பம் உனக்கு வேண்டும் என நீ சொல்.

மனம் : மூவகை இன்பங்களா?

புத்தி : ஆமாம். மூவகையான இன்பங்கள்.

மனம் : அவை எவை?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

புத்தி : **சந்தோஷம், மகிழ்ச்சி, ஆனந்தம்** ஆகியவையே அந்த மூவகையான இன்பங்கள்.

மனம் : முதலில் அந்த மூவகையை பற்றி சற்று விரிவாகச் சொல், பின்னர் எது வேண்டும் என பின்னர் சொல்கிறேன்.

புத்தி : சரி, உன் விருப்பத்தின்படியே அந்த மூவகை இன்பங்களைப் பற்றி சற்று விரிவாக சொல்கிறேன், கேள்.

**சந்தோஷம்** என்பது புற வாழ்க்கையில் ஐம்புலன்களுடைய ஐந்து அறிவுகளின் வாயிலாக அடையக் கூடிய இன்பம். இந்த இன்பம் நிலையற்றது.

**மகிழ்ச்சி** என்பது ஆறாவது அறிவான மனதால் அடையக் கூடிய இன்பம். இந்த இன்பம் நிலையற்றதும் இல்லை, நிலையானதும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்டது.

**ஆனந்தம்** என்பது ஏழாவது அறிவான என்னுடைய உதவியுடன், எட்டாவது அறிவான சத்து என்னும் உண்மை அறிவையையும், ஒன்பதாவது அறிவான சித்து என்னும் அறிவுத் தெளிவைப் பெற்று பத்தாவது அறிவான ஆனந்தத்தின் வாயிலாக அடையக்-கூடிய இன்பம். இந்த இன்பமே நிலையானது.

மனம் : நிலையான இன்பமாகிய ஆனந்தத்தை அடைய விரும்புகிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்வீராக.

புத்தி : நீவீர் விரும்பியதே மிகவும் நல்லது. நிலையான இன்பமாகிய ஆனந்தத்தை அடைவதற்கு முதலில் உம்மை ஒரு நிலைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மனம் : நான் எப்படி என்னை நானே ஒரு நிலைப்படுத்திக் கொள்வது என்பதைப் பற்றிச் சொல்லுங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

புத்தி : ஒரு அகல் விளக்கில் ஒரு தீபத்தை ஏற்றுங்கள். அதன் முன்பாக அமர்ந்து உங்கள் நான்காவது அறிவான பார்வையை அங்கும் இங்கும் அலையவிடாமல் அந்த தீபத்தை உற்றுப் பாருங்கள்.

மனம் : நீங்கள் கூறியபடி அகல் விளக்கில் ஒரு தீபத்தை ஏற்றிவிட்டேன், அதன் முன் அமர்ந்துவிட்டேன். தீபத்தை உற்றுப் பார்க்கிறேன்.

புத்தி : நல்லது. இப்போது அந்த தீபத்தின் ஒளி கண்களுக்கு எப்படித் தெரிகிறது?

மனம் : தீபத்தின் ஒளி, மேல் நோக்கி நெளிந்து, நெளிந்து உயர்கிறது.

புத்தி : அவ்வாறு தீபத்தின் ஒளி, மேல் நோக்கி நெளிந்து, நெளிந்து உயர்ந்தால் நீவீர் இன்னும் ஒருநிலைப்படவில்லை என்பதைக் குறிப்பதாகும். தீபத்தை இரண்டு கண்களின் புருவங்களின் இடையில் உள்ள புருவ மத்தியில் தெரிவதாக நோக்குங்கள்.

மனம் : நோக்குகிறேன்.

புத்தி : நல்லது. இப்போது அந்த தீபத்தின் ஒளி கண்களுக்கு எப்படித் தெரிகிறது?

மனம் : தீபத்தின் ஒளி, நெளிந்து, நெளிந்து மேலே செல்லாமல் ஆடாமல் அசையாமல் மேல் நோக்கி உயர்ந்துள்ளது.

புத்தி : நல்லது. இவ்வாறு தீபத்தின் ஒளியை நான்காவது அறிவால் அறிவது முதலாவது பயிற்சி.

முதல் பயிற்சியில் தேர்ச்சி அடைந்துள்ளீர்கள். தீபத்தை இரண்டு கண்களின் புருவங்களின இடையில் உள்ள புருவ மத்தியில் தெரிவதாக நன்றாக உற்று நோக்குங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மனம் : அவ்வாறே உற்று நோக்குகிறேன்.

புத்தி : உற்று நோக்குவதைத் தொடருங்கள்.

மனம் : தொடர்ந்து உற்று நோக்குகிறேன்.

புத்தி : நல்லது. இப்போது எதைக் காண்கிரீர்கள்.

மனம் : தீபத்தின் ஒளி மெல்ல மெல்ல விரிவடைதை காண்கிறேன். ஓ! தீபத்தின் ஒளி எங்கும் நிறைந்து விட்டது.

புத்தி : நல்லது. நோக்குவதைத் தொடருங்கள்.

மனம் : ஐயோ! ஏதோ சில பயங்கரமான உருவங்கள் தோன்றி என்னை பயமுறுத்துகின்றன.

புத்தி : பயப்பட வேண்டாம். அவை தீயசக்திகள், உமது முயற்சியை தடுக்க முயற்சி செய்கின்றன. அவை தோல்வியடைந்து விரைவில் ஓடி விடும். இப்போது ஓடி விட்டனவா?

மனம் : ஆமாம் ஓடிவிட்டன. நோக்குவதைத் தொடர்கிறேன்.

புத்தி : நல்லது. இப்போது எதை உணர்கிரீர்கள்.

மனம் : சொற்களால் விவரிக்க இயலாத ஒரு சுகத்தை உணர்கிறேன்.

புத்தி : இந்தச் சுகமே எப்போதும் நன்மை தரக் கூடியதும், நல்வாழ்வு தரக்கூடிய ஒருவகையான ஆனந்தம். நீவீர் அமர்ந்து இருப்பது சுகாசனம். இந்த ஆசனம் யோகத்தின் ஒன்பது ஆசனங்களில் ஒன்று. இப்போது இந்தப் பயிற்சியை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டு, அனுதினமும் பயிற்சி செய்யுங்கள். நீவீர் சுகமான ஆனந்தத்தை தொடர்ந்து அனுபவிப்பீர்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மனம் : பயிற்சியை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுவிட்டேன். யோகம் என்றால் என்ன?

புத்தி : யோகம் என்பது சேர்க்கை என்னும் ஒரு காரணப்பெயர். பரம்பொருளின் அங்கமான ஆன்மா என்னும் உயிரை அகத்தால் வழிபடுவதற்கான வழி என்னும் ஒரு நெறி.

மனம் : பரம்பொருளின் அங்கமான ஆன்மா என்னும் உயிரை அகத்தால் வழிப்பட்டால் ஆனந்தமாக வாழ முடியுமா?

புத்தி : முடியும்.

மனம் : அதற்கு நீவீர் உதவி செய்வீரா?

புத்தி : நிச்சயமாக உதவி செய்வேன், அவ்வாறு உதவி செய்வது எமது கடமை. அக்கடமையைச் செய்வதற்காகவே மனித உடலில் உமது அருகிலேயே நல்வழிகாட்டும் நல்ல ஒரு நண்பனாக எப்போதும் இருந்துக் கொண்டிருக்கிறேன்.

மனம் : நீங்கள் எனக்கு நன்சொல் என்னும் நற்போதனை செய்வதால் மரியாதை நிமித்தமாக நான் உங்களை **நண்பரே!** என்று அழைக்கலாமா?

புத்தி : ஓ! தாராளமாக நீங்கள் என்னை அவ்வாறே அழைக்கலாம்.

மனம் : நல்லது. நீங்கள் என்னை எவ்வாறு அழைப்பீர்கள்?

புத்தி : என்னை ஒரு நண்பராக நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளதால் மரியாதை நிமித்தமாக நானும் உங்களை **அன்பரே!** என்று அழைப்பேனாக.

அப்போது முதல் மனதுக்கும் புத்திக்கும் இடையிலான ஓர் உரையாடல், அறியாமை நீங்கிய **அன்பருக்கும் நண்பருக்கும் இடையிலான ஓர் உரையாடலானது.**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## அன்பருக்கும் நண்பருக்கும் இடையிலான ஓர் உரையாடல்

அன்பர் : நண்பரே! தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

நண்பர் : அன்பரே! நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்.

அன்பர் : நீங்கள் எப்போதும் விழித்துக் கொண்டிருப்பீர்களா?

நண்பர் : ஆமாம். நான் உள்ளுயிரான ஆன்மாவின் உடன் பிறந்தவன். ஆன்மா எப்போதும் உறங்குவது இல்லை. அதனால் நானும் எப்போதும் உறங்காமல் எப்போதும் விழித்துக் கொண்டே இருப்பேன்.

அன்பர் : அப்படியா?

நன்பர் : ஆமாம், அப்படித்தான்.

அன்பர் : நமது இருவருக்கும் இடையிலான இந்த உரையாடலை **உள்ளுயிரான** ஆன்மாவும் எப்போதும் கேட்டுக் கொண்டு இருக்கிறதா?

நண்பர் : ஆமாம். அதுவும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

அன்பர் : உள்ளுயிரான ஆன்மா என்று கூறினீர்கள் அல்லவா!

நண்பர் : ஆமாம் கூறினேன்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அன்பர் : உள்ளுயிரான ஆன்மா என்றால் என்ன?

நண்பர் : ஆன்மா என்பது பரமாத்மாவின் ஓர் அங்கம். அதுவே உயிர்.

பரமாத்மா நிலையானது என்பதால் ஆன்மாவான உயிரும் நிலையானது. நீங்களும், நானும் உள்ள இந்த தற்காலிகமான மனித உடல் நிலையற்றது.

ஆன்மாவானது அவ்வுடலின் இதயக்குகையைத் தனது உறைவிடமாகக் குடி கொண்டு அறிவதால் ஆன்மாவை ஓர் உள்ளிருந்து உளவறியும் "**உள்ளுயிர்**" என்று குறிப்பிட்டேன்.

உயிர் என்பதை உள்ளுயிர் எனக் குறிப்பிடுவது ஒரு காரணப் பெயர்.

நிலையான ஆன்மா ஓர் உள்ளுயிராக நிலையற்ற உடலில் குடி கொண்டுள்ளதே! அதுவே உலக மகா "**அதிசயம்**".

அவ்வாறு குடிகொண்டுள்ள **காரணத்தால்** உயிருக்கு "**உள்ளுயிர்**" என்றப் பெயரும், பரமாத்மாவுக்கு "**காரணவன்**", "**அதிசயன்**" போன்ற பல காரணப் பெயர்களும் உண்டு.

அன்பர் : "**அதிசயன்**" என்ற பரமாத்மாவின பெயரைப் பற்றி விரிவாக சொல்லுங்கள்?

நண்பர் : பரமாத்மா என்பது பரம், ஆத்மா ஆகிய இரண்டு சொற்களின் கூட்டு. பரம் என்பதற்கு மேலானது, கடவுள் எனப் பொருள். பரமாத்மா என்பது மேலானதும், கடவுளுமாகிய ஆன்மா என்பதைக் குறிப்பதாகும். பரத்திலிருந்தே அனைத்தும் வெளிப்பட்டுள்ளன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அன்பர் : பரம் என்ற மேலானதைப் பற்றி சொன்னீர்கள்.

நண்பர் : ஆமாம் சொன்னேன்.

அன்பர் : அப்பரத்திலிருந்து வெளிப்பட்ட அனைத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.

நண்பர் : நான் சொல்வதை அமைதியாக கேட்பீர்களா?

அன்பர் : சரி, அமைதியாக கேட்கிறேன்.

நண்பர் : பிரளயம் என்னும் உலகம் முடிவு காலத்திற்கு பிறகு பிரபஞ்சம் என்னும் இவ்வுலகம் முழுவதும் அசைவற்ற பேரமைதியில் இருந்தது. பிராணன் போன்ற அனைத்து சக்திகளும் சமநிலையில் (நிறையொத்த நிலையில் அசைவற்று) இருந்தன.

எல்லாம் வல்லதும், மேலானதுக்கும் மேலானதுமான பராபரம் என்னும் பரம்பொருள், உலகத்தை சமநிலையில் இருந்து இயக்க நிலைக்கு கொண்டு வர எண்ணி அசைந்தது.

பராபரத்தின் அசைவால் சமநிலை வகித்திருந்த பிராணன் போன்ற அனைத்து இயக்கச் சக்திகளும் அசைந்தன. இதுவே **பிரக்கிரமம்** என்னும் வெளிப்பட்டின் துவக்கநிலை.

அந்தச் சக்திகளின் அசைவால், பேருராய்வு (ஒன்றோடு ஒன்று நெருங்கி மிகப்பெரிய உராய்வு என்ற அழுத்தம்) ஏற்படவே அதிலிருந்து மின்னல் போன்ற ஒளியும், இடிமுழக்கம் போன்ற ஒலியும் வெளிப்பட்டன. அவ்வாறு ஒளியும், ஒலியுமாக வெளிப்பட்டதே “ **ஓம்** ”. அதுவே ஏற்றுக்கொள்கிறோம் என்ற உடன்பாட்டைக் குறிக்கும் “ **ஓங்காரம்** ”.

பராபரம் என்னும் பரம்பொருளுக்கு, ஓங்காரவுருவன் என்றும், "**ஓங்காரன்**" என்றும் ஒளியும் ஒலியுமாக வெளிப்பட்டதால் "**ஒளியும் ஒலியுமானவன்**" என்றும் பல காரணப் பெயர்களும் உண்டு.

(குறிப்பு: பிராணன் போன்ற அனைத்து இயக்கச் சக்திகளும் பராபரத்தின் அசைவை ஏற்றுக் கொண்டதை, அதாவது உடன்பாட்டைக் குறிப்பதே "**ஓம் என்ற ஓங்காரம்**". அந்த உடன்பாட்டைக் குறிக்கும் இந்த "**ஓம்**" என்பதே பல்வேறு மொழிகளில் பலவிதமாக உச்சரிக்கப்படுகின்றன.)

பராபரத்தின் அசைவால் பராபரத்திலிருந்து முதலில் **பரம்** வெளிப்பட்டது.

பரத்திலிருந்து **சிவம்** என்னும் சிவத் தத்துவம் வெளிப்பட்டது.

சிவத் தத்துவத்திலிருந்து **சக்தி** தத்துவம் வெளிப்பட்டது.

சிவசக்தியிடமிருந்து **ஐம்பூதங்களும்**, (சிவத் தத்துவமான சுக்கிலமும்) **விந்துவும்**, (சக்தி தத்துவமான சுரோணிதமும்) **நாதமும்** வெளிப்பட்டு ஆகாயமண்டலம் முழுவதும் நிறைந்திருந்தன.

அவற்றிலிருந்து **சக்திசிவம்** என்னும் **சதாசிவமும்**, அந்த சதாசிவத்திலிருந்து **மகேசுவரனும்**, அந்த மகேசுவரத்திலிருந்து **உருத்திரனும்** வெளிப்பட்டன. அந்த உருத்திரனிடத்திலிருந்து **விட்டுணுவும்**, விட்டுணுவிடமிருந்து **பிரம்மாவும்** வெளிப்பட்டன.

அன்பர் : ஓ! சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரம்மா ஆகிய ஐவரும் வெளிப்பட்டவர்களா? தோன்றியவர்கள் இல்லையா?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நண்பர் : ஆமாம். சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரம்மா ஆகிய "**ஐவரும் கர்த்தாக்கள்**". அதாவது அருளல், மறைத்தல் அழித்தல், காத்தல், படைத்தல் ஆகிய ஐந்தொழில்களை செய்யும் ஐங்கடவுளர்களாக வெளிப்பட்டவர்கள்.

அதாவது உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு பரத்தின் வெளிப்பாடான சிவம் மேற்கொண்ட "**ஐந்து மூர்த்தங்கள்**" (திருவடிவங்கள்). எனவே அந்த ஐவரும் சிவம் (பரத்தின் அருவுரு நிலை) என்ற ஒன்றே ஆகும்.

அன்பர் : அந்த ஐவரில் யாரிடமிருந்து மனிதர்கள் முதல் அனைத்து சீவராசிகளும் வெளிப்பட்டன?

நண்பர் : ஆமாம். படைப்புக் கடவுளாகிய பிரம்மாவிடமிருந்து கிரகங்கள் மலை, சமுத்திரம், செடி, கொடி, மரம் ஆகிய தாவர சங்கமங்கள் என்னும் **பிரகிருத்தி** வெளிப்பட்டது. அந்த தாவர சங்கமங்களில் இருந்து மனிதர்கள் முதல் அனைத்து சீவராசிகளும் வெளிப்பட்டன.

மேற்கண்ட வெளிப்பாட்டில் பராபரத்திலிருந்து முதன் முதலில் வெளிப்பட்டதே **மகாபுருஷன்** என்னும் பரம். அதற்குப் பரம்-பொருள் என்றப் பெயரும் உண்டு.

அன்பர் : மகாபுருஷன் என்னும் பரம் என்பதைப் பற்றியும், பிரகிருதி என்னும் உலகைப்பற்றியும், அதிலிருந்து மனிதர்கள் முதல் அனைத்து சீவராசிகளின் வெளிப்பாட்டைப்பற்றியும் அறிந்து-கொண்டேன்.

பரமாத்மாவின் ஓர் அங்கமான ஆன்மாவாகிய உயிர் மனிதர்களின் உடலில் எப்படி உட்புகுந்தது என்பதைப் பற்றி சொல்லுங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நண்பர் : பராபரம் என்னும் பரம்பொருள், உலகத்தை சமநிலையில் இருந்து இயக்க நிலைக்கு கொண்டுவர வேண்டும் என எண்ணி தம்மைத் தாமாகவே புருடராகவும், உலகம் என்னும் பிரகிருதியாகவும் என இரண்டாகப் பிரித்துக் கொண்டது.

புருடர் தன்னை ஆன்மாக்களாகவும், தமது எண்ணத்தை விதைகளாகவும், அந்த விதையை விந்து, நாதம் என இரண்டாகப் பிரிவு படுத்திக் கொண்டது. அந்த எண்ணமாகிய விதைகள் ஆகாய மண்டத்தில் நிறைந்தன. அவை கார்மேகக்-கூட்டங்களை அடைந்து அங்கே சிலகாலம தங்கியிருந்தன.

அவ்வாறு தங்கியிருந்த போது அந்த விதைகள் **ஐம்பூதங்களில் முதலாவதான ஆகாயத்தால் தூய்மைப்படுத்தப்பட்டன**.

கார்மேகங்கள் காற்றோடு கலந்தன. அவ்வாறு கலக்கும் போது அந்த விதைகள் **ஐம்பூதங்களில் இரண்டாவதான காற்றால் தூய்மைப்படுத்தப்பட்டன.**

காற்றோடு கலந்த கார்மேகங்கள் ஒன்றோடு ஒன்று உராய்ந்தன. அந்த உராய்வால் காற்றின் **சகாயன்** என்னும் நெருப்பும், இடியும் அதாவது ஒளியும் ஒலியும் உண்டாயின. அவ்வாறு உண்டான **ஐம்பூதங்களில் மூன்றாவதான** (சடசட என ஒலி எழுப்பி எரியும்) **நெருப்பால் அந்த விதைகள் தூய்மைப்-படுத்தப்பட்டன**.

மின்னல், இடியுடன் "**ஆசாரம்**" என்னும் பெருமழை பெய்தது. **ஐம்பூதங்களில் நான்காவதான மழை நீரால் அந்த விதைகள் தூய்மைப்படுத்தப்பட்டன.**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவ்வாறு தூய்மைபடுத்தப்பட்ட எண்ணமாகி விதைகள் பெரு-மழையின் நீர்துளிகளோடு பூமியை (நிலத்தை) வந்தடைந்தன. சிலகாலம் நிலத்தில் தங்கியிருந்த **அந்த விதைகள் ஐம்பூதங்-களில் ஐந்தாவதான நிலத்தால் தூய்மைப்படுத்தப்பட்டன.**

இவ்வாறு ஐம்பூதங்களினால் விதைகள் தூய்மைப்படுத்தப்படுவதே **பஞ்சாக்கினி வித்தை**.

இராகம், காமம், வெகுளி, சடம், தீபனம் என்னும் ஐவகை உடற்றீ ஆகிய ஐந்தும் **பஞ்சாக்கினி** ஆகும்.

பரம்பொருளின் எண்ணத்திலிருந்து வெளிப்பட்டு, ஐம்பூதங்-களால் தூய்மைப்படுத்தப்பட்ட விதைகள் செடி, கொடி, மரம் ஆகிய தாவர சங்கமங்கள் ஆகி வளர்ந்தன.

அவை குறித்தக் காலத்தில் பூத்தன, பூத்தவை காய்த்தன, காய்த்தவை பழுத்தன. அவையே ஆண், பெண் ஆகிய இருவருக்கு உண்ணும் உணவாயின.

ஆண், பெண் ஆகிய இருவரால் உண்ணப்பட்ட உணவே ஆணிடம் வெண்ணிறமான விந்துவாகவும் (சுக்கிலமாகவும்) பெண்ணிடம் சிவப்பு நிறமான நாதமாகவும் (சுரோணிதமாகவும்) மாறின.

ஆண், பெண் சேர்க்கையின் போது ஆணின் விந்து பெண்ணின் கர்பப் பையில் எறியப்பட்டது. அவ்வாறு எறியப்படுவதே "**ஊமைப்புலி எறிதல்**".

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவ்வாறு எறியப்பட்ட விந்து, பெண்ணின் நாதத்தில் (கரு முட்டையில்) உட்புகுந்த ஒரே நாளில் வெளித்தோலால் மூடப்பட்ட ஒரு கருவாகிறது.

அக்கரு பத்து நாட்களில் திரண்டதொரு உருவகி, பதினைந்து நாட்களில் ஒரு கருமுட்டையாக வளர்கிறது. முப்பது நாட்களில் வச்சிரகம்பம் போல் உருவத்தைப் பெறுகிறது.

இரண்டு மாதங்களில் தலை, முதுகு கொண்டதாகிறது.

மூன்றாவது மாதத்தில் இடுப்பு, கைகால் விரல்கள் போன்றவை உருவாகின்றன.

நான்காவது மாதத்தில் பாதங்களும், மூக்கும், ஐந்தாவது மாதத்தில் வாய், மலவாய், குறி நாக்கு, காது, கண், விழி ஆகியவை உருவாகின்றன.

ஆறாவது மாதத்தில் நகங்களும், ஏழாவது மாதத்தில் மயிர், எலும்பு, நரம்புகள் கொண்ட தோலால் மூடப்பட்டும், சடல நீர் சூழப்பட்ட ஒரு பனிக்குடத்தில் பிண்டமாக வளர்கிறது.

எட்டாம் மாதத்தில் அப்பிண்டத்தின் உச்சந்தலையில் உள்ள **இறைவழி** அல்லது **பிரம்மவழி** என்னும் ஒரு துவாரத்தின் வாயிலாக **பரமாத்மாவின் அங்கமாகிய ஆன்மா** உட்புகுந்து (குண்டலினி சக்தியாக உட்புகுந்து), சிசுவின் **இதயக் குகையில் வாழும் ஓர் உயிருள்ள சிசுவாகி,** ஒன்பதாம் மாதத்தில் தொப்புள் கொடி வழியாக அன்னை உண்ணும் உணவை தானும் உண்டும், அன்னையின் மூச்சுக் காற்றைச் சுவாசித்தும் அச்சிசு உயிர்வாழ்கிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பத்தாவது மாதத்தில் பரம்பொருளின் அருளால் பனிக்குடம் உடைய, தாயின் வயிற்றிலுள்ள அபானவாயு பிடித்துத் தள்ள, தனதுக் காலால் உதைத்துக் கொண்டு, தன் தலையை தாயின் யோனியின் (பிறப்புறுப்பின்) வாயை முட்டிக்கொண்டு, தலைகீழாக இப்பூமியில் ஒரு குழந்தையாகப் பிறக்கிறது.

அவ்வாறு பனிக்குடம் உடைந்து குழந்தைப் பிறப்பதே " **ஊமைப்புலி உடைத்தல்**" என்பதாகும். அவ்வாறு குழந்தை பிறந்தவுடன் பிராணன் கால்களின் விரல்கள் வாயிலாக உடலில் உட்புகுந்து விடுகிறது.

அன்பர் : பரமாத்மாவின் ஓர் அங்கமான ஆன்மாவாகிய உயிர் மனிதர்களின் உடலில் எப்படி உட்புகுந்தது என்ற எனது கேள்விக்கான விடயத்தை விளக்கமாக கூறினீர்கள், பிறந்தவுடன் குழந்தை ஏன் அழுகிறது என்பதைப் பற்றி கூறவில்லையே?

நண்பர் : அன்பரே! அதைப் பற்றியும் சொல்கிறேன் கேளுங்கள்.

பிறக்கும் வரை தாயின் மூச்சுக் காற்றை தொப்புள் கொடி வழியாக சுவாசித்து வந்த குழந்தை முதல் முதலாக தானகவே மூச்சுக் காற்றை சுவாசிப்பதால் உண்டாகும் உடல் வலியால் அது அழுகிறது. **குழந்தை அழுவதைக் கண்டு மற்றவர் சிரிக்கின்றனர்!?!**

அவ்வாறு குழந்தை அழுதவுடன் தாயையும், சிசுவையும் இணைத்த தொப்புள் கொடி உறவு துண்டிக்கப்படுகிறது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அன்பர் : நண்பரே! பிரபஞ்சத்தின் வெளிப்பாடு முதல் குழந்தை பிறக்கும் வரையிலான அனைத்து விடயங்களை விளக்கமாக சொன்னீர்கள். உங்களிடமிருந்து மேலும் பல விடயங்களை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதற்கு தங்களை எனது குருவாக ஏற்றுக்கொள்ள யாம் தீர்மானித்து விட்டோம். எம்மை உங்களது ஒரு சீடனாக ஏற்றுக்கொள்வீர்களா?

நண்பர் : தங்களுக்கு அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், எமக்கு அறிவிக்க வேண்டும் என்ற விருப்பமும் உள்ளதால், தாங்களுக்கு அறிவிப்பது அனைத்தும் பயனுள்ளதாகும். எனவே தங்களை எமது சீடனாக யாம் ஏற்றுக்கொள்கிறோம்.

அன்பருக்கும், நண்பருக்கும் இடையிலான உரையாடல், **ஒரு மரத்தின் அடியில் குருவுக்கும் சீடனுக்கும் இடையிலான ஓர் உரையாடலாக மாறியது.**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

## குருவுக்கும் சீடனுக்கும் இடையிலான ஓர் உரையாடல்

சீடன் : குருவே! தங்களுடைய சீடனாகிய யாம் தங்களை பணிவோடு வணங்குகிறேன்.

குரு : சீடரே! உமக்கு எமது நல்லாசிகள். எமது போதனைகள் அனைத்தும் தங்களுக்கு நற்போதனைகள் ஆகட்டும், நற்போதனைகள் தங்களுக்கு உய்யநெறி காட்டுவதாகட்டும்.

சீடன் : குருவே! குழந்தைப் பிறப்பை பற்றிக் கூறினீர்கள். அக்குழந்தை மனிதனாக வளர்ந்து இவ்வுலகில் வாழும் வாழ்க்கையைப் பற்றிய விடயங்களைக் கூறுங்கள்.

குரு : சீடரே! பிறந்த குழந்தைக்கு உடனடியாகப் பார்க்கும் திறனும், கேட்கும் திறனும் இருக்காது. அவ்விரண்டையும் சிலநாட்கள் கடந்த பின்னரே அக்குழந்தை பெறும்.

ஆனால் முதலாம் அறிவான தொடு உணர்வும், இரண்டாம் அறிவான ருசியும், மூன்றாம் அறிவான நுகர்தலும் அதற்கு இயல்பாகவே இருக்கும். தனது தாயை தொடு உணர்வாலும், நுகர்தலாலும் தெரிந்து கொள்ளும்.

தன் உணவுக்காக தாய்ப்பாலை உறிஞ்சிக் குடித்து மூன்றாம் அறிவான ருசியைத் தெரிந்து கொள்ளும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

தாயானவள் தனது அன்பையும் சேர்த்து தன் தாய்ப்பாலுடன் ஊட்டுவாள். அதாவது தாயானவள் பக்தியையும், கருணை என்ற அருளும் பண்பையும் தாய்ப்பாலுடன் ஊட்டுவாள்.

அதனால் பக்தி என்ற தாயன்பையும், கருணை என்ற தாயின் கருணையையும் குழந்தை முதலில் அறிந்து கொள்கிறது.

தாயின் அன்பாலும், கருணையாலும் குழந்தைக்கு தாய் மீது மிகுந்த அன்பு உண்டாகிறது. அந்த மிகுந்த அன்பே தாய்ப்பற்றாகவும், தாய்ப்பாசமாகவும் மாறுகிறது.

ஆதலால் தாய் மீது உண்டான மிகுந்த அன்பும், அந்த அன்பால் உண்டாகும் தாய்ப்பற்றும், தாய்ப்பாசமும் முதன்மையாகிறது.

அக்காரணத்தால் **தன் தாயே தன்னை பாதுகாக்கும் ஒரு தெய்வம்** என்பதை அக்குழந்தை அறிந்து கொண்டு தாயின் அரவணைப்பில் குழந்தை நன்றாக உறங்குகிறது.

அக்குழந்தை உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து பசியால் அழுகுரல் கொடுத்தவுடன் தாயானவள் ஓடோடி வந்து, குழந்தைக்கு தன் தாய்ப்பாலை ஊட்டி அதன் பசியைப் போக்குகிறாள்.

“**உணவே அருமருந்து**” என்பதால் குழந்தைக்கு நோய் நொடி எதுவும் வராமல் **தனது உணவுக் கட்டுப்பாட்டால்** மிகவும் பாதுகாப்பாகத் தன் குழந்தைக்குத் தாய்ப்பாலை ஊட்டி வளர்க்கிறாள்.

“ **உணவுக்** கட்டுப்பாட்டால் **மட்டுமே நோய் நொடியின்றி வாழ முடியும் என்பதை அறிவீராக** ”.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சீடன் : குழந்தைக்கு தாயின் பால் தானே சிறந்தது?

குரு : ஆம். தாயின் பாலே மிகச் சிறந்தது. அதற்கு இணையான உணவு குழந்தைக்கு வேறு எந்த உணவுமே இல்லை.

சீடன் : பிறந்த குழந்தை அதிகநேரம் உறங்குகிறதே... அது ஏன்?

குரு : பிறந்த குழந்தையின் மனதில் எந்தவிதமான ஆசைகளும் இருப்பதில்லை. எவரிடம் எந்தவிதமான ஆசைகள் இல்லையோ அவர்களிடம் மட்டுமே அமைதி நிலவும்.

அவ்வாறு அமைதியாக இருப்பதால்தான் பிறந்த குழந்தை அதிக நேரம் உறங்குகிறது.

சீடன் : குருவே! குழந்தை உறங்கும் போது சிரிக்கிறதே........... அது ஏன்?

குரு : ஓ! ஆதுவா? பரமாத்மாவாகிய பரம்பொருள் தனது அங்கமான ஆத்மா என்னும் உயிருடன் விளையாடுவதை அறிவதால் குழந்தை சிரிக்கிறது.

சீடன் : பரம்பொருள் தனது அங்கமான ஆத்மா என்னும் உயிருடன் விளையாடுவாரா?

குரு : ஆமாம். "**பரம்பொருள் தனது அங்கமான ஆத்மா என்னும் உயிருடன் விளையாடுவதை எப்போதும் விரும்புவார்**". அதன் அடிப்படையில் தான் ஒரு குழந்தையை ஐந்து வயது நிறையும் வரை "**இறைவனின் குழந்தை**" என்பார்கள்.

சீடன் : குருவே! பிறந்த குழந்தை பார்ப்பதைப் பற்றியும் கேட்பதைப் பற்றியும் கூறுங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : சில நாட்களுக்கு பிறகு குழந்தைக்கு நான்காவது அறிவான பார்க்கும் திறனும், ஐந்தாவது அறிவான கேட்கும் திறனும் பரம்பொருளின் அருளால் அக்குழந்தைக்குக் கிடைக்கிறது.

குழந்தை தன் கண்களால் முதலில் தாயின் புன்னகை புரியும் முகத்தைப் பார்த்தும், தன் காதுகளால் தாயின் இனிமையான குரலைக் கேட்டும், தனது தாயின் உருவத்தையும், குரலையும் முதன் முதலில் பதிவு செய்து கொள்ளுகிறது.

குழந்தையின் உச்சந்தலையை நுகர்ந்து, என் கண்ணே, என் செல்லமே, என் தங்கமே எனக் கனிவோடும் தாய்-அன்போடும் கொஞ்சும் போது தாயின் உள்ளன்பை அதன் ஆறாவது அறிவான மனம் அறிந்து கொள்கிறது. அந்த அறிவால் குழந்தை சிரிக்கிறது.

**"தாயானவள் தன் குழந்தையின் சிரிப்பில் எல்லாம் வல்ல பரம்பொருளைக் (இறைவனைக்) காண்கிறாள், ஆனந்தம் அடைகிறாள். அதனைக் கண்ட குழந்தையும் ஆனந்தமடைகிறது".**

**"இவ்விருவரும் அடைந்த ஆனந்தத்தை உணர்ந்த அந்தத் தாயின் உள்ளுயிரும், குழந்தையின் உள்ளுயிரும் ஆனந்தத்தை அனுபவிக்கின்றன".**

சீடன் : குருவே! குழந்தை பேசுதைப்பற்றி கூறுங்கள்.

குரு : தாயானவள் தன் குழந்தைக்கு, முதலில் தன் கணவனை "**அப்பா**" என்றும், கணவனின் தாய் தந்தை, தனது தாய் தந்தை ஆகியோரை " பாட்டீ, தாத்தா" என்றும், தனது மூத்தக் குழந்தைகளை அக்கா, அண்ணன் என்றும், இளைய

குழந்தைகளை தம்பி, தங்கை என்றும், தனது சகோதரனை "மாமா" என்று எல்லா உறவுகளையும் அடையாளம் காட்டுகிறாள்.

குழந்தை அவர்களை அடையளம் கண்டுகொள்கிறது.

குழந்தை தன் மழலைக் குரலில் முதன் முதலில், "**தாதா**" என்றும் "**மாமா**" என்றும் கூறுகிறது.

"தாதா" என்று கூறுவதை கேட்டு தாதாவும், "மாமா" என்று கூறுவதை கேட்டு தாய் மாமனும் ஆனந்தமடைகின்றனர்.

("தா" என்பது தனக்குள் ஒன்றை வேண்டிச் சொல்லும் சொல், "மா" என்பது பெருமையையும், அழகையும் குறிக்கும் சொல். "தாதா" வேண்டியவை அனைத்தையும் கேட்காமல் கொடுக்கக் கூடியவர், "மாமா" பெருமைகள் அனைத்தையும் தரக்கூடியவர்.)

சீடன் : குழந்தைக்கு உண்டாகும் உளப்பற்றைப் பற்றி கூறுங்கள்.

குரு : குழந்தை தன் தாயின் உதவியால் அறிந்த மொழியே தாய்-மொழியானது போலவே அது பிறந்த நாடும் தாய்நாடானது.

தாய்மொழி மீதும் தாய்நாடு மீதும் பக்தி உண்டாயிற்று. பின்னர் உற்றார் உறவினர், சொந்த பந்தங்கள் மீதும் உண்டாகும் பிடிக்கை என்னும் புறப்பற்று மனதுக்கு உண்டாயிற்று.

அந்த புறப்பற்று அதிகமாக அதிகமாக மனதுக்கு பரம்-பொருளின் மீது இருந்த இறைப்பற்றாகிய அகப்பற்று என்னும் பாசம் குறைந்து விடுகிறது. அவ்வாறு குறைவதை குழந்தை அறிவதில்லை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அதுவே "**அறியாத்தன்மை என்னும் அறியாமையின்**" துவக்க நிலையாகும். (அந்நிலையில் உச்சந்தலையில் இருந்த குண்டலினி சக்தி மூலாதாரத்தை நோக்கி கீழே இறங்குவதே அந்த துவக்க நிலையாகும்.)

சீடன் : அறியாத்தன்மை எப்படி அதிகமாகிறது?

குரு : கண்ணால் பார்ப்பதையும், காதால் கேட்பதையும், மூக்கால் நுகர்வதையும், நாக்கால் ருசி அறிவதையும், தோலால் தொடு உணர்வை உணர்வதையும் அறிந்த மனம் அவை அனைத்தும் தனக்கு வேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. அது 5 ஆதல் 7 வரையிலான வயதில் உண்டாகும், அதுவே அறியாமையின் ஆரம்பம்.

அந்த ஆசை குழந்தைப் பருவம், இளமைப் பருவம், வாலிபப் பருவம், முதுமைப் பருவம் ஆகிய பருவ மாற்றங்களால் அதிகரிக்கிறது. ஆசை அதிகரிக்க, அதிகரிக்க அறியாத்தன்மையும் அதிகரிக்கிறது. (குண்டலினி சக்தி மூலாதாரத்தை வந்தடைகிறது.)

சீடன் : அறியாத்தன்மையின் விளைவுகளைப் பற்றி கூறுங்கள்.

குரு : அந்த அறியாத்தன்மையால், மனிதர்களுக்கு மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆகிய மூவகை ஆசைகள் அதிகரிக்கின்றன.

மண்ணாசையால் தேவைக்கு அதிமான ஆசையால் சொத்துக்களை மேலும் மேலும் சேர்க்கிறான்.

பொன்னாசையால் தங்கம், வெள்ளி போன்ற கனிமங்களை வாங்கிக் குவிக்கிறான்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பெண்ணாசையால் காமுகனாகிறான்.

அந்த ஆசைகளை மேலும் மேலும் அடைவதற்கு, திருடனாகித் திருடுகிறான், கொலைகாரனாகி கொலை செய்கிறான்.

பொய் பித்தலாட்டக்காரனாகி பித்தாலாட்டம் செய்கிறான்.

கஞ்சனாகி மேலும் மேலும் பொருள் சேர்க்கிறான்.

காமுகனாகி பலப்பெண்களின் கற்பைச் சீரழிக்கிறான். அதாவது காமம் (புணர்ச்சியின்பம்), வெகுளி (சினம்), மயக்கம் (அறிவின் திரிபு) ஆகிய மூவகை உயிர்க் குற்றச் செயல்களைப் புரிகிறான்.

மேற்கண்டவற்றின் வாயிலாக, கன்மம் (பாவம்), மாயை (பொய்த் தோற்றம்), அகங்காரம் (நான் என்ற செருக்கு) ஆகிய மும்மலங்கள் அதிகரிக்கின்றன.

சீடன் : ஐயோ! அறியாமையின் விளைவுதான் மும்மலங்களா?

குரு : ஆமாம்.

சீடன் : அறியாமையின் விளைவான மும்மலங்கள் பற்றித் தெரிந்து கொண்டேன்.

அந்த மும்மலங்களை அடக்கப்பட வேண்டியவைகளா? அல்லது வெளியேற்றப்பட வேண்டியவைகளா?

குரு : சீடரே! மும்மலங்களைப் பற்றி தவறான ஒரு புரிதலே “அவை அடக்கப்பட வேண்டியவைகளா? அல்லது வெளியேற்றப்பட வேண்டியவைகளா?” எனத் தவறாகக் கேட்கப்படும் ஒரு கேள்வி.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மும்மலங்கள் என்பது, மனித உடலைப் பொருத்தவரை மலத்துவாரத்தின் வழியாக வெளியேரும் மலக்கழிவு, குறியின் வழியாக வெளியேரும் சிறுநீர், தோலின் வாயிலாக வெளியேரும் வியர்வை ஆகிய மூன்றும் ஆகும்.

அவற்றை அடக்கினால் மனித உடலில் பல நோய்கள் உண்டாகும். அவற்றை வெளியேற்றினால்தான் மனித உடல் தூய்மையடையும்.

ஆனால் கன்மம், மாயை, அகங்காரம் ஆகிய மூன்றும் மனித மனத்தின் மும்மலங்களாகும். அவற்றை அடக்கினால் மனநோய் உண்டாகும். அவற்றை வெளியேற்றினால் மட்டுமே மனித மனம் தூய்மை அடையும். மனித மனம் தூய்மை அடைய அந்த மும்மலங்களும் அடக்கப்பட வேண்டியவைகளா? அல்லது வெளியேற்றப்பட வேண்டியவைகளா? என்பதை இப்போது தாங்களே சொல்லுங்கள்.

சீடன் : மனிதமனம் தூய்மை அடைய அந்த மும்மலங்கள் அவசியம் அவை வெளியேற்றப்பட வேண்டியவைகளே! தவிர அடக்கப்பட வேண்டியவைகள் அல்ல. குருவே! மனித மனம் தூய்மை அடைய மும்மலங்களும் வெளியேற்றப்பட வேண்டியவை என்பதை நன்றாக அறிந்து கொண்டேன்.

குரு : எப்போது நீங்கள் அந்த மும்மலங்கள் வெளியேற்றப்பட வேண்டியவைகள் என்பதை அறிந்தீரோ அப்போது முதல் அறியாமை என்னும் இருட்டிலிருந்து ஞானம் என்னும் வெளிச்சிற்கு வர ஆரம்பித்து விட்டீர்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

(உயிரின் ஒளியை உடலிலேயே வைத்துக்கொண்டு, அந்த ஒளியை வெளியில் தேடுவதே அறியாமை.)

சீடன் : குருவே! மனிதர்களின் குணம் ஒவ்வொருக்கு ஒருவர் மாறுபடுகிறதே, அதைப்பற்றிய விடயங்களை கூறுங்கள்.

குரு : சாத்துவிகம், இராசதம், தாமசம் ஆகிய மூன்றும் மூல முக்குணங்கள். பரத்தின் வெளிப்பாட்டில் இம்மூன்று மூல முக்குணங்களும் உள்ளடங்கும். எனவே மனிதர்களிடமும் அனைத்து சீவராசிகளிடமும் அம்மூன்று குணங்களும் இருக்கும்.

**சாத்துவிகம்** என்பது மூலமுக்குணங்களில் மேன்மையானதும், மிகச் சிறந்த குணமும் ஆகும். அது அருள், **ஐம்பொறி அடக்கம்**, ஞானம், தவம், பொறை (அடக்கம்), மேன்மை, மோனம், வாய்மை ஆகிய எட்டு வகைப்படும்.

**இராசதம்** என்னும் இரசோகுணம் என்பது மத்தியமான குணமாகும். அது தானம், தவம், மெய்மை, தருமம் பேணல், ஞானம், கேள்வி ஆகிய ஏழு வகைப்படும்.

**தாமசம்** என்னும் தமோகுணம் என்பது கீழ்த் தரமான குணமாகும். அது பேருண்டி, ஒடுங்கல், சோம்பு, மூரி, காமம், நீதிகேடு, நித்திரை, மறதி, தணியாக் கோபம், வஞ்சம் ஆகிய பத்து வகையாகும். அதாவது காம, வெகுளி, மயக்கங்களுக்கு காரணமான குணமாகும்.

**சாத்துவிகம், இராசதம், தாமசம் ஆகிய மூன்று குணங்களில் சாத்துவீக குணமே மிகச் சிறந்த குணமாகும். எனினும் அது நெறிமுறைப்படுத்தப்பட வேண்டும். அதனை நெறிமுறைப் - படுத்துவதற்கு ஞானகுருவின் உதவி மிகவும் அவசியம்.**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சீடன் : ஆமாம் குருவே! நீங்கள் கூறிய பல்வேறு விடயங்களின் வாயிலாக, "**நான், எனது**", என்ற எண்ணம் என்னைவிட்டு விலகுவதை உணர்கிறேன்.

அறியாமை என்னும் இருட்டிலிருந்து ஞானம் என்னும் வெளிச்சிற்கு வருவதையும் உணர்கிறேன்.

குரு : எப்போது, "**நான், எனது**" என்ற எண்ணம் உங்களைவிட்டு விலகுவதை நீங்கள் உணர ஆரம்பித்து விட்டீரோ, அப்போதே உங்கள் மனதில் தன்னுணர்ச்சியை (தன்னைப் பற்றியத் தன்னறிவைத்) தேடும் அகத்தேடல் அதிகமாகி விட்டது.

அந்த அகத்தேடலால் உண்மை என்னும் சத்துவத்தை அறிவீர்கள். சித்தம் என்னும் அறிவையும் மனத்தெளிவையும் அடைவீர்கள்.

பரம்பொருளின் அருள் உங்களுக்கு கிடைப்பதற்கான தக்க தருணம் (தக்க சமயம்) நெருங்கி விட்டது.

சீடன் : குருவே! தன்னறிவைப் பற்றி கூறுங்கள். அதனை தங்களது வாயிலாக அறிவது எமக்கு கிடைத்த பெரும் பாக்கியம் ஆகும்.

குரு : பிரபஞ்சத்தில் பராபரத்திலிருந்து வெளிப்பட்ட பரம் எவ்வாறு பல்வேறு சீவராசிகளாக வெளிப்பட்டது என்பதை யாம் முன்பு உரைத்தது நினைவு இருக்கிறதா?

சீடன் : ஆமாம் குருவே! மிகவும் நன்றாக நினைவு இருக்கிறது.

குரு : நல்லது. அதிலிருந்து தாங்கள் எதை அறிந்து கொண்டீர்கள்?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சீடன் : தேவாதி தேவர்கள் முதல் செடி, கொடி, மரம் வரையிலான அனைத்து சீவராசிகளும் பரத்திலிருந்து வெளிப்பட்டவையே என்பதை அறிந்துகொண்டேன்.

குரு : மிகவும் நல்லது. திருக்கோயில்களுக்குச் சென்று பரமாகிய இறைவன், இறைவியை வழிபட்டு மனநிறைவோடு வீடு (இல்லம்) திரும்புகிறீர்கள் அல்லவா?

சீடன் : ஆமாம்.

குரு : திருக்கோயில்களை பற்றிய விடயங்களை தெரியுமா?

சீடன் : திருக்கோயில்கள் மிகப்புனிதமானவை என்பதையும், அவை பழங்காலத்தில் நாட்டை நல்லாட்சி புரிந்த அரசர்களால் கட்டப்பட்டவை என்பதையும் அறிவேன்.

இவற்றைத் தவிர வேறு எதுவும் எனக்கு தெரியாது.

குரு : பிரபஞ்சம் என்னும் அண்டத்தில் "**மகாபிதாவாகிய பரமாத்மா**" குடிகொண்டுள்ளதால் பிரபஞ்சம் ஒரு மிகப்பெரிய கோயில். அக்கோயில் மிக உயர்ந்தது,அளவற்றது, மிகப்புனிதமானது, மிகப்பெருமையுடையது என்பதால் அது ஒரு "**மகாகோயில்**".

இந்த பூலோகத்தில் கட்டப்பட்டுள்ள கோயில்கள் அனைத்தும் அந்த மகாகோயிலுக்கு ஒப்பானவை.

மகாகோயில் மிகப்புனிதமானது என்பதால் பூலோகத்தில் கட்டப்பட்டுள்ள கோயில்கள் அனைத்தும் மிகப்புனிதமானவை. அவற்றின் புனிதத் தன்மையை சிறப்பித்து குறிப்பிடும் பொருட்டு "**திரு**" என்ற சிறப்புச் சொல்லை முன்னிருத்தி "**திருக்கோயில்**" எனச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

திருக்கோயில்கள் ஒவ்வொன்றும் உயர் அறிவை போதிக்கும் பல்கலைக் கழகங்கள். உடல் நோய் நீக்கும் மருத்துவச் சாலைகள். மானுடர் ஒன்று கூடி ஒருவருக்கு ஒருவர் நலம் விசாரித்து மனம்மகிழ் மன்றங்கள். இயல், இசை, நாடகம் ஆகியவை அரங்கேறும் கலைக் கூடங்கள். பசிப்பிணியைப் போக்கும் அன்னதான கூடங்கள். அஞ்சியவர்களுக்கு அடைக்கலம் தரும் அஞ்சினான் புகழிடங்கள்.

சீடன் : பூலோகத்தில் கட்டப்பட்டுள்ள திருக்கோயில்களைப் பற்றியும், அவற்றின் சிறப்புக்களை பற்றியும் தெரிந்து கொண்டேன். அவற்றின் அமைப்பைப் பற்றிய விடயங்களைக் கூறுங்கள்.

குரு : திருக்கோயில்களின் அமைப்பு பிரபஞ்சதத்தின் அமைப்பைப போலவே அமைக்கப்பட்டிருக்கும்.

அவ்வாறு அமைக்கப்படுவது சிற்ப சாத்திர (ஆகமம்) விதி முறையாகும். சிற்ப சாத்திரத்தில் மகாபிதா **“மகாபுருடன்”** (மகாபுருஷன்) எனச் சுட்டிக்காட்டப்படுவார்.

திருக்கோயில்களின் அமைப்பு மகாபுருடனின் நின்ற (ஸ்தூலம்) நிலை, கிடந்த (சூட்சுமம்) நிலை, அமர்ந்த (காரணம்) நிலை ஆகிய மூவகை நிலைகளைக் குறிப்பிடுவதாகும். அவற்றை மகாபுருடனின் நின்றகோலம், கிடந்தகோலம், அமர்ந்தகோலம் என்றும் குறிப்பிடப்படுவதுண்டு. மகாபுருடனின் ஸ்தூலம் என்னும் நின்ற நிலை - திருக்கோபுரமாகும். சூட்சுமம் என்னும் கிடந்த நிலை - முகமண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம். காரணம் என்னும் அமர்ந்த நிலை - கருவறை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அந்தக் கருவறைக்கு மேலே உள்ளது ஊர்தி என்னும் விமானம். விமானத்தின் உச்சியில் உள்ள கலசம் விமான வாயில் என்னும் "**இறைவழி**". அந்த இறைவழியே பரமாத்மாவின் அங்கமான ஆன்மாவாகிய உயிர் உடலில் உட்புகும் வழி. உயிர் உடலைவிட்டு வெளியேற வேண்டிய வழியும் அ.்.தே.

சீடன் : குருவே! திருக்கோயில்களின் திருச்சுற்றுக்களில் வெள்ளை, சிவப்பு (காவி) நிறங்களில் பட்டைகள் அடிக்கப்பட்டுள்ளதே, அதன் உட்பொருளை பற்றிக் கூறுங்கள்.

குரு : திருக்கோயில் திருச்சுற்றுச் சுவர்களில் அடிக்கப்பட்டுள்ள வெள்ளை, சிவப்பு (காவி) நிறங்களில் பட்டைகள் உயர்ந்த-தொரு உண்மையை உணர்த்துவதாகும். அதுவானது:

சிவம் என்பது சுக்கிலம் (வெண்ணீர்) அதன் நிறம் வெள்ளை. சக்தி என்பது சுரோணிதம் (செந்நீர்) அதன் நிறம் சிவப்பு அல்லது காவி. அண்டமாகிய பிரபஞ்சம் முழுவதும் சிவமும், சக்தியும் நிறைந்துள்ளன என்பதே அதன் உட்பொருளாகும்.

திருக்கோயில்களுக்குச் சென்று பரமாகிய இறைவன், இறைவியை வழிபட்டு மனநிறைவோடு வீடு திரும்புவது ஒரு மனப்பயிற்சி.

சீடன் : மனப்பயிற்சியா!!!

குரு : ஆமாம்.

சீடன் : எனக்கு இது வேண்டும், அது வேண்டும் என அவர்களிடம் தேவைகளை வேண்டிக் கேட்டு அவற்றை பெறுவதற்காக இல்லையா?

குரு : இல்லை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சீடன் : அது ஒரு மனப்பயிற்சி என்றீர்களே.அதைப் பற்றிய விடயத்தை சொல்லுங்கள்.

குரு : ஒவ்வொரு திருக்கோயில்களின் திருச்சுற்றுக்களுக்கும் நுழை-வாயில்களான திருக்கோபுரங்கள் இருக்கும். பொதுவாக மூன்று திருச்சுற்றுக்கள் கொண்ட திருக்கோயில்கள் மிக அதிகமாக இருக்கும்.

முதலாம் திருச்சுற்றின் கீழ்த்திசை நுழைவாயிலான திருக்கோபுர நிலைக்கால் படியிலும், திருமண்டபங்களிலும், கர்பக்கிரகத்தின் முன்னும் சிலக் குறியீடுகள் பொறிக்கப்பட்டிருக்கும். அவற்றை எப்போதாவது தாங்கள் பார்த்தது உண்டா?

சீடன் : பார்த்தது இல்லை.

குரு : திருக்கோபுர நிலைக்கால் படியிலும், திருமண்டபங்களிலும், கர்பக்கிரகத்தின் முன்னும் பொறிக்கப்பட்டுள்ள அக்குறியீடுகளை முதலில் பார்த்து வாருங்கள். அதற்கு பின்னர் அந்த மனப்பயிற்சி பற்றிய விடயங்களைக் கூறுகிறேன்.

. . . . . . . . . . . . . .

சீடன் : குருவே! யாம் தங்களை அன்போடு வணங்குகிறோம்.

குரு : சீடரே! எம்மீது தாங்கள் கொண்டுள்ள அன்பும், தங்கள் மீது யாம் கொண்டுள்ள அன்பும் எப்போதும் குன்றாமல் குறையாமல் நிலைத்திருக்கட்டும்.

திருக்கோயில்களுக்கு சென்றீர்களா? அங்கே குறியீடுகள் ஏதேனும் கண்டீர்களா?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சீடன் : குருவே! தங்களது அறிவுரையின்படி, சிவன் கோயில், பெருமாள் கோயில், அம்மன் கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களுக்கும் சென்று இறைவன், இறைவி, பரிவார தெய்வங்கள் ஆகிய அனைத்தையும் வழிபட்டேன்.

திருக்கோபுர நிலைக்கால் படி, திருமண்டபம், கருவறைக்கு முன்புறம் போன்றவற்றின் கற்றரையின் மீது குறியீடுகள் பொறிக்கப்பட்டுள்ளதை கண்டேன்.

அக்குறீடுகளில் ஒரே மாதிரியான குறியீடு ஒன்று அனைத்துக் கோயில்களின் திருக்கோபுர நிலைக்கால் படியில் பொறிக்கப்-பட்டுள்ளதைக் கண்டேன்.

அவற்றில் சிலக் குறியீடுகள் மிகத் தெளிவாகத் தெரிந்தன, பெரும்பான்மையான கோயில்களில் அக்குறியீடுகள தெளிவாகத் தெரியவில்லை.

குரு : நல்லது. அக்குறியீடு காண்பதற்கு எப்படி இருந்தது என்பதைக் கூறுங்கள்.


சீடன் : அக்குறியீட்டின் மையத்தில் ஒரு புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அப்புள்ளியை சுற்றிலும் மூன்று செவ்வக வடிவங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக உள்ளன.

முதலாவது செவ்வகத்திலிருந்து கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகிய நான்கு புவியின் திசைகள் நோக்கும் கோடுகள் உள்ளன. அக்குறியீட்டைப் பற்றிக் கூறுங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பரமதரிசனம்



குரு : நீங்கள் கண்ட அக்குறியீடு, வடிவங்களையும் உருவங்களையும் உருவாக்கும் **கோடுகள், கோணங்கள்** முதலியவற்றை கணித அடிப்படையில் விளக்கும் வடிவகணிதத்தைச் சார்ந்தது.

அந்தக் குறியீட்டின் பெயர் "**பரமதரிசனக் குறியீடு**" . அக்குறியீடு பெரும்பாலும் திருக்கோயில் திருக்கோபுரங்களின் நுழை - வாயில்களில் மட்டுமே பொறிக்கப்பட்டிருக்கும்.

அக்குறியீடு குறிப்பாக "**உய்த்துணர்தலுக்காக**" அதவாது அதன் மதிப்பை அனைவரும் அறிவதற்காக ஞானிகளின் ஆராயுந்தன்மையால் ஆராய்ச்சி செய்து வரையப்பட்டது.

அதிலுள்ள ஒவ்வொரு வடிவங்களுக்கும் அதாவது ஒவ்வொரு குறியீடுகளுக்கும் ஓர் உட்பொருளுண்டு.

எனவே அக்குறியீடுகள் வேலையற்ற சோம்பேரிகளால் கீறப்பட்ட கீறல்கள் அல்ல என்பதை முதலில் தெரிந்து நன்றாகத் கொள்ளுங்கள்.

சீடன் : அதிலுள்ள ஒவ்வொரு வடிவங்களுக்கும் குறியீடுகளுக்கும் ஓர் உட்பொருளுண்டு என்றீர்கள். அவற்றைப் பற்றி விரிவாக போதிக்க வேண்டுகிறேன்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : மையத்திலுள்ள புள்ளி ஆகாயத்தையும், அதாவது மூலத்தையும், வட்டம் காலத்தையும், சதுரம் இடத்தையும், செவ்வகம் இயக்கச் சக்தியையும் குறிக்கும்.

வடக்கு - தெற்கு திசைகளைக் குறிக்கும் செங்குத்துக் கோடு காரணம், பிரகாசம் என்னும் சிவத்தத்துவத்தையும், கிழக்கு-மேற்கு திவைகளைக் குறிக்கும் படுக்கைக் கோடு காரியம், விமர்சனம் என்னும் சக்தி தத்துவத்தையும் குறிக்கும்.

ஒரு செங்குத்துக் கோடும் ஒரு படுக்கைக் கோடும் இணைந்தது ஒரு கூட்டல் குறியீடு, அக் கூட்டல் குறியீடு "**சிவசக்தி தத்துவத்தையும், காரண காரியத்தையும், பிரகாச விமர்சன ரூபம்**" என்பதையும் குறிக்கும்.

இரண்டு சாய்வு கோடுகள் இணைந்த வடிவம் ஒரு பெருக்கல் குறியீடு. அது சோதியின் திசைகளைக் குறிக்கும்.

அவ்விரண்டு சாய்வு கோடுகள் வெட்டும் இடம் (மையப்புள்ளி) ஆகாயத்தையும், தென்கிழக்கு திசையை நோக்குவது நிலத்தையும், வடகிழக்கு திசையை நோக்குவது நீரையும், தென்கிழக்கு திசையை நோக்குவது நெருப்பையும், வடமேற்கு திசையை நோக்குவது காற்றையும் ஆக ஐந்து சோதிகளையும், ஐம்பூதங்களையும் குறிக்கும்.

ஐம்பூதங்களான நிலத்தைச் சதுர வடிவிலும், பூமியை அரைவட்ட வடிவிலும், நெருப்பை மேல் நோக்கும் முக்கோண வடிவிலும், காற்றை அறுகோண வடிவிலும், ஆகாயத்தைக் கால் வட்டவடிவிலும் வடிவ கணிதத்தின் வாயிலாகக் குறிப்பிடப்படுவதுண்டு.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நீங்கள் கண்ட அக்குறியீட்டின் மையத்தில் (நடுநாயமாக) உள்ள புள்ளி, ஒன்றின் மதிப்பைச் (சிறப்பைச்) சுட்டிக் காட்டுவதாகும்.

உலக வெளிப்பாட்டிற்கான மூலமே ஒரு புள்ளியாக சுட்டிக் காட்டப்பட்டிருப்பது பராபரத்திலிருந்து முதன் முதலில் வெளிப்பட்ட மூலம் என்னும் **பரம்** அதாவது **பரத்துவம்** என்பதைக் குறிப்பிடுவதாகும்.

அப்பரத்தைச் சுற்றிலும் முதலாவது செவ்வகத்திற்கு உட்பட்டப் பகுதி **பரலோகம்** என்பதைக் குறிக்கும்.

முதலாவது செவ்வகத்திற்கும், இரண்டாவது செவ்வகத்திற்கும் உட்பட்டப் பகுதி **வியூகம்**. அது சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரம்மா ஆகிய ஐந்து கர்த்தாக்கள் வாழும் **தேவலோகத்தைக்** குறிக்கும்.

இரண்டாவது செவ்வகத்திற்கும், மூன்றாவது செவ்வகத்திற்கும் உட்பட்டப் பகுதி **விபவம்**. அது மனிதர் முதல் அனைத்து சீவராசிககளும் வாழும் **பூலோகத்தைக்** குறிக்கும்.

மூன்றாவது செவ்வகத்திற்கு வெளியிலுள்ள பகுதி **அந்தர்யாமித்வம்** அது பூதகணங்கள் வாழும் **வெளி-லோகத்தைக்** குறிக்கும்.

இவ்வாறு பரலோகத்திலுள்ள பரத்துவம், தேவலோகத்தில் தேவர்களாகவும், பூலோகத்தில் மனிதர் முதல் அனைத்து சீவராசிகளாகவும், வெளிலோகத்தில் பூதகணங்களாகவும் வெளிப்பட்டுள்ளது என்பதை உணர்த்துவதாகும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவ்வாறு பல்வேறு வகையில் வெளிப்பட்ட அப்பரமே இத்திருக்கோயிலில் கல்லாலும், ஐம்பொன்னாலும் சிற்பமாக உருவாக்கப்பட்ட அர்ச்சை என்னும் வழிபாட்டுக்குரிய தெய்வத் திருமேனியைக் கொண்ட ஒரு அர்ச்சனாமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார் என்பதை **தன்னுணர்ந்து** பரத்தை தரிசிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே அக்குறியீட்டின் உட்பொருளாகும். இந்த உட்பொருளையே திருக்கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களும் உணர்த்துகின்றன.

சீடன் : தன்னுணர்ந்து பரத்தை தரிசிப்பது தான் மனப்பயிற்சியா?

குரு : ஆமாம். தன்னுணர்தல் என்பது ‘பரமும், மானுடர் உடலில் குடிகொண்டுள்ள ஆன்மாவும் ஒன்றே! வெவ்வேறு அல்ல!’ என்பதை தன்னுள் அறிந்து உணர்வதாகும். அவ்வாறு உணர்வதே மனப்பயிற்சி.

சீடன் : குருவே! மனப் பயிற்சியைப் பற்றி தெரிந்து கொண்டேன்.

வடக்கு, தெற்கு ஆகிய இரண்டு திசைகள் நோக்கும் செங்குத்துக் கோடு சிவத் தத்துவத்தையும், கிழக்கு, மேற்கு இரண்டு திசைகள் நோக்கும் படுக்கைக் கோடு சக்தி தத்துவத்தையும் குறிக்கிறது என்பதையும் அறிந்து கொண்டேன்.

அக்கோடுகளே சிவசக்தியையும், காரண காரியத்தையும், பிரகாச விமர்சன ரூபத்தையும் குறிக்கிறது என்பதையும் அறிந்து கொண்டேன்.

ஆனால் காரண காரியத்தையும், பிரகாச விமர்சன ரூபத்தையும் குறிக்கும் அக்கோடுகள் பரலோகத்தில் வரையப்படவில்லையே. அவ்வாறு வரையப்படாத காரணத்தைப் பற்றிக் கூறுங்கள்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : ‘பரத்துவம் தம்மை தேவர்களாகவும், மனிதர் முதல் அனைத்து சீவராசிகளாகவும், பூதகணங்களாகவும் வெளிப்பட்டு, அங்கு இங்கு என இல்லாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருந்து இவ்வுலகத்தை இயங்கச் செய்தாலும், இத்திருக்கோயிலில் தெய்வத் திருமேனியுடன் அர்ச்சனா மூர்த்தியாக எழுந்தருளினாலும், காரண கர்த்தாவாகிய பரமானது காலம், இடம், காரணகாரியம் (காரணமும் அதன் விளைவுகளும்) போன்ற அனைத்திற்கும் அப்பாற்பட்டது என்பதை சூட்சுமமாக (எச்சரிக்கையாக) அறிவிப்பதற்காகவே அந்தக் கோடுகள் வரையப்படவில்லை.

சீடன் : குருவே! ஒரு விடயத்தைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும்.

குரு : எந்த விடயத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்?

சீடன் : அதுவா? அது .......... அது ..........

குரு : தயங்க வேண்டாம். கேளுங்கள்

சீடன் : திருக்கோபுரங்களில் பரமானது அந்தந்த லோகங்கள் எந்தந்த ரூபங்களில் வெளிப்பட்டுள்ளார் என்பதை சிற்பங்களாக சிற்பிகள் வடிவமைத்துள்ளதை கண் குளிரக் கண்டேன்.

ஆனால் காண்போர் அருவருக்கும் வகையில் (ஆபாசமாகச்) ஆதூசையாகச் சில சிற்பங்கள் காட்சி அளிக்கின்றனவே அவை திருக்கோயில்களின் புனிதத்தன்மையை கெடுப்பவையாக இருக்கிறதே.

குரு : உலக வெளிப்பாட்டைப் பற்றிய அனைத்து விடயங்களும் சிற்பங்களாக திருக்கோபுரங்களில் இடம்பெற வேண்டும் என்பது சிற்ப சாத்திர விதிமுறை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

திருக்கோபுரங்களில் இயற்கையான வாழ்க்கை நடைமுறையில் உள்ளவை அனைத்தையும் மானுடர் அனைவருக்கும் விளங்கும் படியாக பொம்மைகளாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்பதே அந்த விதிமுறை.

மானுடர்களுக்கு பகுத்தறிவு, ஞானம் ஆகிய இரண்டு சக்திகள் உண்டு.

பகுத்தறிவு என்பது மெய்ப்பொருளில் சிறிதளவு ஊடாடிப் பெறுவது.

ஞானம் என்பது அதனைப் தெய்வீகப் பார்வையில் தேடிக்கொள்வது.

பகுத்தறிவு, ஞானம் இரண்டும் மானுடருக்குள்ளே ஒன்றோடு ஒன்றாக இணைந்துள்ளவை. பகுத்தறிவு என்பது விடயங்களை வேறுபடுத்திப் பார்ப்பது.

ஞானம் என்பது விடயங்களை ஒன்றுபடுத்திப் பார்ப்பது அதாவது வேற்றுமைகளை ஒரே இசைவில் இணைப்பது. மாயத்திரையை அகற்றிப் பார்ப்பது. அதாவது புறக்கண்களால் காண முடியாதவை அனைத்தையும் ஞானக் (அகக்) கண்களால் காண்பது.

அறிவின் பரப்பளவு (விசாலமானது) பிரமாண்டமானது. மேலும் அது அகண்ட எல்லைகளைக் கொண்டது. அறிவுக்கு பகுத்து அறியும் தன்மையை வழங்குவது ஞானம் என்ற நதியே ஒளிமிகுந்ததாக உள்ளது. எங்கே பகுத்தறிவு முடிவடைகிறதோ அங்கே ஞானம் தொடங்குகிறது என்பது ஆன்றோர் வாக்கு.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

பகுத்தறிவோடு புறக்கண்கள் கொண்டு பார்க்கின்றபோது அவற்றில் சில அருவருக்கத் தக்கதாகத் தெரியும். ஆனால் அவற்றை ஞானக்கண்களோடு (அகக்கண்களோடு) பார்க்கின்ற போது அவற்றில் அருவருக்கத் தக்கதாக எதுவுமே இல்லை என்பது புரியும்.

உலகத்தின் வாழும் அனைத்து சீவராசிகளும் அழியாமல் இருக்க வேண்டும் என்பதே உண்மை. அவ்வாறு அனைத்து சீவராசிகளும் அழியாமல் இருப்பதற்கு இனவிருத்தி செய்யப்படவேண்டும் என்பது மிகவும் அவசியம். இனவிருத்தி செய்யாமல் இருப்பது இனவிருத்தியை (தங்கச் சங்கிலியை) துண்டிப்பதற்கு ஒப்பாகும்.

இல்லங்களில் நிகழும் திருமணம் போன்ற நல்ல நிகழ்சிகள், திருக்கோயில்களில் நிகழும் திருவிழாக்கள் ஆகியவற்றின் போது வாழைத்தாரோடு வாழை மரங்களையும், மாவிலை தோரணங்கள் கட்டுவதும் மங்கலகரமான இனவிருத்தியை செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதாகும்.

எனவே திருக்கோயில்களில் உள்ள அனைத்துச் சிற்பங்களையும், பொம்மைகளையும் ஞானக் கண்களோடு காணவேண்டும். அவ்வாறு கண்டு அப்பொம்மைகள் பால் உணர்வைத் தூண்டும் சிற்பங்கள் அல்ல, இனவிருத்தியை செய்யவேண்டும் என்பதை மட்டுமே உணர்த்துகின்றன என உங்கள் மனதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

சீடன் : குருவே! திருக்கோயில்களில் உள்ள அனைத்துச் சிற்பங்களையும், பொம்மைகளையும் ஞானக் கண்களோடு காணவேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : நல்லது. நீங்கள் அறிந்து கொண்டதை அனைவருக்கும் அறிவிப்பீராக!

சீடன் : குருவே! உலகில் அனைத்து சீவராசிகளின் வெளிப்பட்டைப் பற்றியும், திருக்கோயில் சென்று இறைவன், இறைவி, பரிவார தெய்வங்களை வழிபட்டு, தன்னுணர்வோடு இல்லம் திரும்ப - வேண்டும் என்பதையும், திருக்கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களை ஞானக் கண்களோடு பார்க்கவேண்டும் என்பதையும் அறிந்துகொண்டேன். நீங்கள் கூறியபடியே நான் அறிந்து உணர்ந்து கொண்டவற்றை அனைவருக்கும் அறிவிப்பேன்.

குரு : நல்லது.

சீடன் : குருவே! இப்பூலோகத்தில் மானுடர் பிறப்பைப் பற்றியும், மானுடர் வாழ்க்கையில் செய்யவேண்டிய கர்மாக்கள் (செயல்கள்) பற்றிய விடயங்களை தாங்கள் கூறியதன் வாயிலாக அறிந்துகொண்டேன்.மேலும் மானுடர் இறப்பைப் பற்றி அறிய விரும்புகிறேன். அதைப் பற்றிய விடயங்களை கூறுங்கள்.

குரு : மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும், புத்தியும், சத்தும் (உண்மையும்), சித்தமும் (அறிவுத் தெளிவும்), ஆனந்தமும் பரிசுத்தமான ஆத்மாவாகிய உயிரோடு நெருங்கிய தொடர்பு உடையவை. ஆதலால் மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும் உண்மையிலேயே ஆத்மாவாகிய உயிரை போலவே பரிசுத்தமானவை.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

ஆனால் மானுடர்கள் பூமியல் வாழும் காலத்தில் ஐம்புலன்களின் வாயிலாக பெறக்கூடிய இன்பங்களை மேலும் மேலும் அடையவிரும்புவதால் மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும் இன்பதுன்பங்களை அனுபவித்து அசுத்தம் அடைகின்றன. அவ்வாறு அசுத்தம் அடைந்த மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கானதே இறப்பு.

இறந்த பின்னர், மானுடராய் வாழும் காலத்தில் விரும்பி வணங்கிய தெய்வங்கள் வாழும் லோகத்தை சென்றடைவர். அங்கே தாங்கள் செய்த நற்செயல்களால் (நல்ல கர்மாக்களால்) கிட்டும் பயனை அனுபவிக்கும் ஒரு சீவனாக வாழ்வர்.

அவ்வாறு அங்கே வாழ்ந்து முடித்து, மீண்டும் இந்த பூமியில் ஒரு சீவராசியாக பிறந்து, மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும் தூய்மை அடையும் வரை வாழ்ந்து முடித்த பின்னரே மறுபிறப்பு இல்லாத வீடுபேறு (கைவல்லியம்) என்னும் முக்தி நிலை அடைவர்.

சீடன் : வீடுபேறு பற்றி எல்லோரும் கூறுகிறார்கள். ஆனால் மறுபிறப்பு என்று எதுவுமே இல்லை என்று சிலர் கூறுகிறார்களே?

குரு : மறுபிறப்பு என்று எதுவுமே இல்லை என்பது ஆன்மாவாகிய உயிருக்கு மட்டுமே பொருந்தும்.

ஏனெனில் ஆன்மாவுக்கு பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை. ஆனால் மறுபிறப்பு இல்லை என்பது மனதுடன் கூடிய மானுடர் உடலுக்கு பொருந்தாது.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

மனமும் மனதோடு தொடர்புடைய எண்ணமும் தூய்மை அடையும் வரை மானுடராக மீண்டும் மீண்டும் மறுபிறவி எடுத்து இப்பூமியில் வாழ்ந்தே ஆகவேண்டும்.

மானுட பிறவி எடுத்த எவராலும் இறப்பையும், பிறப்பையும் தவிர்க்க இயலாது. இறப்பு பிறப்பு ஆகிய இரண்டிலிருந்து ஓடி ஒளிந்து தப்பித்து கொள்ளவும் முடியாது,

சீடன் : இறந்தவர் உடலை (சடலத்தை) சுடுகாட்டில் எரிக்கும் போதோ அல்லது இடுகாட்டில் புதைக்கும் போதோ சிலர் ஞானிகள் போல பேசுகிறார்களே! அவர்கள் அடைந்த ஞானம் எது?

குரு : அது **சுடுகாட்டு அல்லது இடுகாட்டு ஞானம்**. அக்காட்டின் எல்லையைத் தாண்டிய அடுத்த வினாடியே அந்த ஞானம் அவர்களிடம் இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். எனவே அது ஒரு போலியான ஞானம், உண்மையான ஞானம் அல்ல.

சீடன் : குருவே! குழந்தை பிறப்பு பற்றி கூறினீர்கள், அவ்வாறு பிறந்த குழந்தை மனிதனாகி வாழ்ந்து இறப்பதைப் பற்றி கூறுனீர்கள். இவ்வுலகில் மனிதர்களாக வாழும் காலத்தில் அவசியம் செய்ய வேண்டியவை பற்றிச் சொல்லுங்கள்.

குரு : இப்பிரபஞ்சத்தில் ஏராளமான கிரகங்கள் என்னும் கோள்கள் உள்ளன. அவற்றில் சீவராசிகள் ஆரோக்கியமாகவும், மிகவும் இன்பமாகவும் வாழ்வதற்குத் தகுதியானவை மிகக்குறைவு. அவற்றில் ஒன்றே நாம் வாழும் இந்த பூமி. இந்த பூமி பல பகுதிகளைக் கொண்டது. அப்பகுதிகளில் ஒன்றே மிகப் புனிதமான நம் பாரத பூமி.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

நம் பாரத பூமியில் மிதமான வெட்பமும், மிதமான குளிரும், ஆரோக்கியமாக வாழ்வதற்கான சுற்றுச் சூழலும், நீர்வளமும், நிலவளமும் கொண்டது நம் பாரதநாட்டின் தென்பகுதி. இந்தத் தென்பகுதிக்கு புண்ணிய பூமி என்றும் **கர்ம பூமி** என்றும் சிறப்புப் பெயர்களுண்டு.

சீடன் : கர்மபூமி என்றீர்கள் கர்மம் என்றால் என்ன? அதைப்பற்றி கூறுங்கள்.

குரு : கர்மம் என்றால் செயல் என்றுப் பொருள். இவ்வுலகில் வாழும் காலத்தில் பிறவிக் கர்மம் என்ற செயல்களை செய்து முடிக்க வேண்டும்.

சீடன் : பிறவிக் கர்மம் என்ற செயல்களைப் பற்றி கூறுங்கள்.

குரு : அன்புள்ள சீடரே, சற்று ஓய்வு எடுங்கள். நீங்கள் கேட்டவற்றைப் பற்றி பிறகு கூறுகிறேன்.

. . . . . . . . . . . . . . . .

சீடன் : குருவே! தங்களுக்கு எமது வணக்கம்.

குரு : வணக்கம். நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டீர்களா?

சீடன் : ஆமாம் குருவே! நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டேன்.

குரு : நல்லது. சீடரே! பிறவிக் கர்மம் என்ற செயல்களைப் பற்றி கேட்டீர்கள் அல்லவா? அச்செயல்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன் **திரிபுடி ஞானத்தைப் பற்றி** தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

சீடன் : திரிபுடி ஞானமா!?!

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : ஆமாம். திரிபுடி ஞானத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு தாங்கள் கவனஞ் செலுத்தும் ஒரு **கவனனாக** இருக்க வேண்டும். கவனன் என்பது நினைவு (ஞாபக சக்தி) அது உள்ளோனைக் குறிக்கும் சொல்.

அவ்வாறு ஒரு நினைவு உள்ளோன் ஆவதற்கு மூன்று செயல்கள் புரிய வேண்டும். அதுவே திரிபுடி ஞானம்.

முதலாவது செயல் "**சிரவணம்**". அதற்கு மனதை ஒருநிலைப்படுத்தி, எம்மைப் பார்த்து, யாம் கூறுவதை தங்களது காதுகளால் கவனமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

ஏதேனும் சந்தேகம் (ஐயம்) எழுந்தால், அதனை எம்மிடம் கேட்டு சந்தேகத்தை முற்றிலுமாக போக்கிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது செயல் "**மனனம்**" . அதற்கு யாம் கூறியவை மறக்காமல் தாங்கள் எப்போதும் நினைவில் (ஞாபகத்தில்) வைத்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு நினைவில் வைத்துக் கொள்வதற்கு மனப்பாடம் செய்ய வேண்டும்.

மூன்றாவது செயல் "**நிதித்தியாசனம்**" . அதற்கு தாங்கள் கேட்டறிந்தவற்றை இடைவிடாது தியானிக்க வேண்டும்.

அதாவது திரும்பத் திரும்ப சிந்திக்க (நினைத்துப் பார்க்க) வேண்டும். நான் கூறியபடி செய்வீரா?

சீடன் : குருவே! தாங்கள் கூறியபடியே செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : நல்லது. இப்போது தாங்கள் கேட்ட பிறவிக் கர்ம செயல்களை பற்றி கூறுகிறேன், கேளுங்கள்.

இப்பூமியில் பிறந்த மானுடர் அனைவரும் வாழ்நாட்களில் செய்து முடிக்க வேண்டிய நல்ல செயல்களே பிறவிக் கர்மம் என்பதாகும்.

அவை உழவு, தொழில், வரைவு (திருமணம்), வாணிகம், விச்சை (கல்வி), சிற்பம் ஆகிய ஆறு செயல்களாகும்.

அந்த ஆறு செயல்களைக் குறிப்பிடுவதே ஆறு ஆரங்கள் கொண்ட ஆணைச் சக்கரம், அதுவே ஆழிக் குறியீடாகும்.

அச்செயல்களைச் செய்ய வேண்டும் என்பதே பரம் இட்டக் கட்டளையாகும்.

அந்தப் பரம் இட்டக் கட்டளையை சிரமேற்கொண்டு கண்ணும் கருத்துமாக இருந்து எந்தவிதமான குற்றமும் குறையும் இல்லாமல் அதாவது “**கர்ம சுத்தியாக**” செய்து முடிப்பவரே கர்மயோகி.

அந்தக் கர்மயோகியே “**கர்ம முக்தி**” அடைந்து, இறப்பிற்கு பின் “**முக்தி நிலை**” என்னும் “**வீடுப்பேரு**” அடைந்தவராவார்.

சீடன் : மானுடராய் பிறந்த அனைவரும் செய்ய வேண்டிய ஆறு செயல்களான கர்மாக்கள் பற்றி தங்களது போதனைகள் வாயிலாக அறிந்து கொண்டேன்.

தங்களின் போதனைகளின் வாயிலாக மானிட உடலில் குடிகொண்டிருக்கும் ஆத்மாவாகிய உயிரும் பரமாத்மாவும் ஒன்றே

என்ற (சத்து) உண்மையை உணர்ந்து, (சித்து) தெளிவடைந்த நிலையில் அறிவுடையவனாக உள்ளேனே... இந்நிலை எது?

குரு : இந்நிலை சீவன் முக்தி (சீவ முக்தி) அடைந்த நிலை. ஆன்மா மனித உடலில் ஓர் உயிராக வாழும் காலத்தில் ஞானயோகத்தை கடைப்பிடித்து வாழ்ந்து முக்திநிலை அடைவதாகும்.

சீவ முக்தியை அடைந்து மனிதராக இந்த பூமியில் நெடுங்காலம் வாழ்ந்தவர்களே ஞானிகள்.

சீடன் : கர்ம யோகம் - கர்ம முக்தி, ஞான யோகம் - சீவ முக்தி ஆகிய இரண்டைப் பற்றி அறிந்து கொண்டேன். இரண்டைத் தவிர வேறு யோகங்கள் ஏதேனும் உண்டா?

குரு : உண்டு. இவ்விரண்டைத் தவிர மேலும் இரண்டு யோகங்கள் உண்டு. அவை பக்தி யோகம், இராச யோகம் ஆகிய இரண்டு யோகங்கள்.

**பக்தி யோகம்** என்பது எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் இறைவன் மீதும் எப்போதும் வைக்கும் உண்மையான அன்பு. நீங்கள் எம்மீது உண்மையான அன்புவைத்துள்ளதே அந்தப் பக்தி யோகம். அந்த பக்தி யோகத்தில் சிறந்தவர்களே பக்தர்கள். இந்த யோகம் மிகவும் எளிதானது.

**இராச யோகம்** என்பது மூச்சுப் பறிற்சியால் இட, பிங்கலை நாடிகளை இடது புறமாகவும், வலது புறமாகவும் மாறி மாறி சுழலச் செய்து மூலாதாரத்தில் மூன்றரை சுற்றுக்களாக (1 - சத்துவம், 2 - இராசதம், 3 - தாமசம், ½ - பிரகிருதியாக)

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

சுருண்டு கிடக்கும் பாம்பின் வடிவிலான குண்டலினி சக்தியை முதுகுத் தண்டில் உள்ள சூட்சும நாடியில் மேல் எழச் செய்து மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாதகம், விசுத்தி, ஆஞ்யா, சகஸ்ரஹாரம் ஆகிய யோக மய்யங்களில் நிறுத்தி தியானித்து உச்சந்தலையில் உள்ள இறைவழி வழிவாக அந்த குண்டலினி சக்தியை சீறச் செய்து, தாமரை மலர் ஆயிரம் இதழ்களாக மலர்வது போன்ற பேரமைதி நிலை அடைவதாகும்.

இந்த இராச யோகத்தில் தேர்ச்சி அடைந்தவர்களே யோகிகள். இந்த யோகம் மிகவும் கடினமானது. மேலும் இதனை அடைய குருவின் உதவியும், விடாமுயற்சியும் அவசியம் தேவை.

ஒரு குருவின் உதவியில்லாமல் முயற்சி செய்தால் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்படும். எனவே தானாக முயற்சி செய்வதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

சீடன் : இராசயோகத்தில் ஆன்மாவாகிய உயிர் எந்தெந்த நிலைகளில் இருக்கும்.

குரு : பொதுவாக அனைத்து மானுடரின் உடலில் குடிகொண்டுள்ள ஆன்மாகிய உயிர் விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவத்தைகளில் (நிலைகளில்) இருக்கும்.

ஆனால் இராச யோகிகளின் உடலில் குடிகொண்டுள்ள ஆன்மாகிய உயிர் விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய மூன்றுக்கும் மேலாக, அமைதி (துரியம்), பேரமைதி (துரியாதீதம்) ஆகிய இரண்டு நிலைகளில் இருக்கும்.

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

அவ்வாறு யோகிகள் விழிப்பு நிலையிலும், தூங்கும் நிலையிலும் இருப்பதனால் இந்நிலையை இராச யோகத்தில் "**தூங்கியும் தூங்காத** நிலை" என சிறப்பித்து கூறப்படுகிறது.

புரிகிறதா?

சீடன் : பு....ரி...கி...ற....து

குரு : உங்கள் கண்களில் தூக்கத்தின் அறிகுறியைக் காண்கிறேன். எனவே நீங்கள் உங்களது படுக்கையில் படுத்து நன்றாக தூங்குங்கள்.

சீடன் : உத்தரவு குருவே!

குரு : அப்படியோக ஆகட்டும்.

. . . . . . . . . . . . . . . . . . . . . .

சீடன் : குருவே! நேற்று இரவு '**நான்**' மிகவும் நன்றாக உறங்கினேன். மனமாகிய நான் இப்போது மிகவும் தெளிவாக இருக்கிறேன்.

குரு : நல்லது. நீங்கள் நன்றாக உறங்கும் போது உங்கள் தோல் தொடு உணர்வை உணர்ந்ததா?

சீடன் : இல்லை

குரு : மூக்கு வாசனையை முகர்ந்ததா?

சீடன் : இல்லை

குரு : நாக்கு ருசியை ருசித்ததா?

சீடன் : இல்லை

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : கண்கள் எதையாவது (காட்சியைப்) பார்த்ததா?

சீடன் : இல்லை.

குரு : காதுகள் எதையாவது (ஓசையைக்) கேட்டதா?

சீடன் : இல்லை.

குரு : மனதில் ஏதேனும் எண்ணங்கள் உண்டானதா?

சீடன் : இல்லை.

குரு : கனவுகள் ஏதேனும் கண்டீர்களா?

சீடன் : இல்லை.

குரு : உங்கள் ஐந்து அறிவுகளாகிய ஐம்புலன்கள் எதையுமே அறியவில்லை. ஆறாவது அறிவான மனதில் எந்த விதமான எண்ணங்களும் உண்டாகவில்லை, கனவுகள் காணவில்லை என்று தானே சொல்லுகிறீர்கள்?

சீடன் : ஆமாம்.

குரு : நீங்கள் சொல்வது எல்லாம் உண்மைதானே?

சீடன் : ஆமாம். உண்மைதான்.

குரு : மனமாகிய நீங்களும் தெளிவாக இருப்பதும் உண்மைதானே?

சீடன் : ஆமாம். அதுவும் உண்மைதான்.

குரு : ஐந்து அறிவுகளாக ஐம்புலன்கள் எதையுமே அறியவில்லை என்று சொல்வதும் நீங்கள்! ஆறாவது அறிவான உங்கள் மனதில் எந்த விதமான எண்ணங்களும் உண்டாகவில்லை

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

கனவுகள் காணவில்லை என்று சொல்வதும் நீங்கள்! தாங்கள் சொல்வது எல்லாம் உண்மை என்று சொல்வதும் நீங்கள்! தெளிவாக இருப்பதாகச் சொல்வதும் நீங்கள்! அப்படியானால் **"நான்"** மிகவும் நன்றாக உறங்கினேன் என்று யாரை குறிப்பிடுகிறீர்?

சீடன் : ................

குரு : உங்களுக்கு மனக்கலக்கம் உண்டாகிறதா?

சீடன் : ஆமாம் குருவே.

குரு : உங்களுக்கு மனக்கலக்கம் உண்டாக வேண்டாம். "**நான்**" என்று சொன்னது மனமாகிய நீங்கள் அல்ல.

அது உங்கள் உடலில் குடிகொண்டுள்ள ஆன்மாவாகிய "**உயிர்**".

சீடன் : உயிரா!

குரு : ஆமாம். உயிரே தான்!

சீடன் : குருவே! உயிருக்கு எல்லா மொழிகளும் தெரியுமா?

குரு : பரமாத்மாவின் அங்கமான ஆன்மாகிய உயிருக்கு மனமொழி, உடல் மொழி, கண்சாடை மொழி, பேச்சு மொழி என உலகின் அனைத்து மொழிகளும் தெரியும்.

அது மட்டுமல்ல ஆன்மாவாகிய உயிர் உள்ளாள் என்னும் ஒரு ரகசிய உளவாளி.

சீடன் : குருவே! நான் அந்த ஆன்மாவாகியஉயிருடன் பேசமுடியுமா?

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

குரு : ம்ம்...மனதாகிய உங்களுக்கு எப்போது புலன்களின் இன்பங்கள் மீது வெறுப்புணர்வு உண்டாகி, **“உமி போக்கிய அரிசி“**என்னும் **“தொலியல்“** நிலையை அடைந்து, புத்தியின் ஒரு அன்பனாகி, உண்மையை உணர்ந்து, தெளிவான அறிவு பெற்று, குருவின் ஒரு சீடராகி பரம்பொருளுக்குரிய முக்குணங்களை பற்றி அறிந்து கொண்டீரோ அப்போது முதல் நீவிர்பரமாத்மாவின் அங்கமான ஆன்மாவாகிய உயிருடன்தான் பேசிக்கொண்டு இருந்தீர்கள்!

சீடன் : அப்படியானால் புத்தியாகவும், நன்பனாகவும், குருவாகவும் எனக்கு போதித்த தா....ங்....க....ள் !!!!!

ஹ......., ஹ......., ஹ......., ஹ......., ஹ.........

**(இரகசிய உளவாளியாகிய ஆன்மா என்னும் உயிர் சிரித்தது.)**

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022

# நிறைவுரை

முதலில் மனித மனதுக்கும் புத்திக்கும் இடையிலான உரையாடல் ஒரு விதையாகி, நண்பனுக்கும் அன்பனுக்கும் இடையிலான உரையாடல் (மனவெழுச்சியால் உண்மைப் பொருள் பற்றி கலந்து பேசுதல்) ஒரு போதி மரமாக வளர்ந்து, குருவுக்கும் சீடனுக்கும் உரையாடல் போதி மரத்தின் குளிர்ச்சி தரும் நிழலாகி, **மனத்திற்கும், உள்ளுயிர் என்னும் உள்ளே குடிகொண்டுள்ள ஆன்மாவாகிய பரமாத்மாவுக்கும் இடையிலான ஓர் உள்ளுரையாடல் ஆனது**.

பரமாத்மாவின் ஓர் அங்கமும் ஆன்மாவும் ஆகிய உயிர் காலம், இடம், காரணகாரியத்திற்கு அப்பாற்பட்டது. எனவே **உள்ளுயிர்** என்ற உள்ளே குடிகொண்டிருக்கும் ஆன்மாவாகிய பரமாத்மாவே உண்மையான குரு. அந்தப் பரமாத்மாவை அடையாளம் காட்டுபவள் அன்னை ஆதிபராசக்தி என்பதனால் அந்த அன்னையை ஞானகுருவாக ஏற்றுக் கொள்வோமாக!

மனக்கவலையின் விளைவுகளான மன அழுத்தம், மனவுலைச்சல் ஆகிய மன-நோய்களை நீக்கும் மருந்து இவ்வுலகில் எதுவுமே இல்லை. எனினும் **முள்ளை முள்ளால் அகற்றுவது போல** மனக்கவலையை மனதால் மட்டுமே நீக்க முடியும். எனவே அழுவதாக இருந்தால் மனமாறும் வரை அழுது தீர்த்து விடுவோமாக! சிரிப்பதாக இருந்தால் மனமாறும் வரை சிரித்து தீர்த்து விடுவோமாக! என்பதை நன்குணர்ந்தும், செயலாற்றியும் வாழ்நாள் முழுவதும் ஆனந்தமாக வாழ்வோமாக!!

© தி.லெ.சுபாஸ் சந்திர போஸ் 2022